


விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 37 வள்ளுவ ஆண்டு 2055

கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை (28.11.2024)











# தமிழர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடந்த மாவீரர் தினம்

(கி.வசந்தன்)

நாட்டில் வடக்கு – கிழக்கு உட்பட தமிழர் பிரதேசமெங்கும் நேற்று உணர்வெழுச்சியுடன் மாவீரர் தின இறுதி நாள் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் மரணித்த உறவுகளுக்காக வருடாந்தம் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. நவம்பர் 21 முதல் மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்பட்டு நவம்பர் 27 துயிலும் இல்லங்களில் மாலை 6.05 இடம்பெறும் சுடர் ஏற்றும் நிகழ்வுடன் நிறைவுபெறும்.

வவுனியாவில் பிரதான மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள ஈச்சங்குளம் பகுதியில் 561 ஆவது இராணுவதலைமையகம் அமைந்திருப்பதால் அதற்கு அருகா மையிலுள்ள மைதானத்தில் உணர் வெழுச்சியுடன் மாவீரர் நாள் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது மணி ஒலிக்கப்பட்டு, ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தின் பிரதான ஈகைச்சுடரினை இரு மாவீரர்களின் தாயா ரான பாலசிங்கம் பாக்கியம் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனையடுத்து நினைவேந்தலில் கலந்து கொண்ட மாவீரர்களின் பெற்றோர்களால் (தொடர்ச்சி...) 02

## கண்டியில் 11 பி.செ. பிரிவுகளில் எச்சரிக்கை

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் 250மில்லிமீற்றருக்கும் (தொடர்ச்சி.) 02

## இரத்தினபுரியில் எலிக் காய்ச்சலுக்கு 22பேர் உயிரிழப்பு

(எஸ்.டொரின்)

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் எலிக்காய்ச்சலினால் அதிகளவான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாகாண சபை வளாகத்தில் நேற்று(27) (தொடர்ச்சி.) 02

## கிழக்கு ஏனைய மாகாணங்களுடன் தொடர்பு துண்டிப்பு

( முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலை இன்னும் சீரடையாத காரணத்தினால் மக்களின் இயல்பு வாழ்க்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (தொடாச்சி...) 02

## ஓரினச் சேர்க்கையால் எச்ஐவி அதிகரிப்பு

(எஸ்.டொரின்)

இலங்கையில் எச்.ஐ.வி தொற்று வேகமாக அதிகரித்து வருவதாக தேசிய தொற்றுநோயியல் பிரிவு எச்சரித்துள்ளது. பொதுமக்களிடையே 1 விகிதத்துக்குக் குறைவாக இருந்தாலும் ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் திருநங்கை (தொடாச்சி...) 02

## 1,480 முன்பள்ளிகள் மறு அறிவிப்பு வரை மூடல்

வடமத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட 1,480 முன்பள்ளிகளை நேற்று (27)முதல் மறு அறிவித்தல் வரை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக மாகாண ஆரம்பக் குழந்தைப் பருவ அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் நிலந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாசவின்(தொடர்ச்சி...) 02

## நிலவும் சீரற்ற காலநிலையால்

# நாடெங்கும் 208, 000 பேர் பாதிப்பு: ஐவர் பலி

**உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரிப்பு**

(எஸ்.டொரின்)

நாட்டில்பெய்து வரும் கனமழை காரணமாக 17 மாவட்டங்களில் 59 ஆயிரத்து 269 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 7 ஆயிரத்து 582 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 05 ஆக அதிகரித்துள்ளதுடன், (தொடர்ச்சி) 02

## கிழக்கில் ஒய்ந்தது கன மழை: வெளுத்தது வானம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கில் கடந்த நான்கு தினங்களாக கொட்டிய அடைமழை புதனன்று ஓய்ந்தது. அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நான்கு தினங்களுக்குப் பின்னர் மக்கள் சூரியக் கதிர்களை காலையிலேயே காணக்கூடியதாக இருந்தது. வெயில் எறித்தது. இதனால் மக்கள் பெரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

வீடுவாசல்களில்தேங்கியிருந்த தண்ணீரையும்சேறுசகதியையும் அகற்றுவதிலும் உடுதுணிகளைக் கழுவி காயப்போடுவதிலும் மக்கள் பெரும் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தார்கள்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இந்த நிலைமை என்றாலும் திருகோணமலையில் வெயில் (தொடர்ச்சி.) 02

## கிழக்கு முஸ்லிம் பாடசாலைகளுக்கு நாளையும் விடுமுறை

(கீதபொன்கலன், முகம்மட் முக்தார்)

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாண முஸ்லிம் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட விசேட விடுமுறையினை நாளை 29 ம் திகதிவரை நீடித்து வழங்குவதற்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு கிழக்கு மாகாண ஆளுனர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதற்கமைய இன்று 28 ம் திகதியும் நாளை 29 ம் திகதியும் கிழக்கு மாகாண சகல முஸ்லிம் பாடசாலைகளும் மூடப்பட்டிருக்குமென கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் அறிவித்துள்ளார்.

# உழவு இயந்திரம் வெள்ளத்தில் மூழ்கி மத்ரசா மாணவர் 04பேர் பலி

## மேலும் மூவரை தேடும் பணி தீவிரம்



**மாளிகைக்காட்டில் பெரும் சோகம்**



( ஏ.எல்.எம்.ஷினாஸ், முகமட் முக்தார், சுலைமான் ராபி)

காரைதீவு – அம்பாறை நகருக்குச் செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள சம்மாந்துறை மாவடிப்பள்ளி பாலத்தின் ஊடாக வெள்ள நீரை கடக்க முற்பட்ட உழவு இயந்திரம் குடைசாய்ந்து ஆற்றில் விழுந்ததில் அதில் பயணம் செய்த 11 மத்ரஸா மாணவர்கள் வெள்ள நீரில் மூழ் கினர். இதனையடுத்து உடனடியாக தேடும் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் பொலிஸார் சிவில் அமைப்புக்கள் இரவோடு இரவாக ஐந்து (தொடர்ச்சி...) 02

## அம்பாறை மாவட்டம்:

# 5000 குடும்பங்கள் 42 முகாம்களில் தஞ்சம்

அம்பாறை மாவட்டத்தில் 22,000 குடும்பங்களைச் சேர்ந்த 73,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தற்போதுவரை பாதிக்கப்பட்டுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

5000 குடும்பங்கள் 42 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விவசாய செய்கை பண்ணப்பட்டுள்ள 85,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் அதிகளவான வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேநேரம் பல்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 5 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் 70 வீடுகள் பகுதி அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறிய அவர், அம்பாறை கடோல் வாடி மற்றும் மாவடிப்பள்ளி ஆகிய இடங்களில் அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் கூறினார்.

இதேநேரம் ஒலுவிலை அண்மித்த களியோடைப்பால த்திற்கு அருகில் உள்ள பாலமொன்றும் உடைந்துள்ளதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.



அம்பாறை மாவட்டத்தில் நேற்று மழை வீழ்ச்சி குறைவடைந்து சீரான காலநிலை தோன்றியபோதும் குடியிருப்புக்கள் மற்றும் வீதிகளில் உள்ள நீர் வடிந்து செல்லாமல் அதிகரிப்பதையும் காண முடிந்தது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதுடன் பிரதேச செயலகம் மற்றும் சமூக அமைப்புக்கள் சில தனவந்தர்கள் இணைந்து உணவுப்பொதிகளை வழங்க தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### கண்டியில்...

அதிகமான கடும் மழை பெய்து வருவதால் இவ்வாறு அபாயமுள்ள இடங்களாக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் கண்டிமாவாட்ட பிராந்திய நிலையம் அறிவித்துள்ளது.

இந்த வகையில் மாவட்டத்தின் ஹாரிஸ்பத்துவ, மெததும்பர, கங்கவட கோரலய, உடுதும்பர, தொலுவ, யட்டிநுவர, உடபலாத, பாதஹேவாஹட்ட, உடுநுவர, பாததும்பர, தெல்தொட்டை ஆகிய செயலகப்பிரிவுகள் எச்சரிக்கையான வலயங்களாகும்

ஆகவே , மண்சரிவு முன்னெச்சரிக்கை காலப்பகுதியில் பாரிய அனர்த்தங்களிலிருந்தும் பாதுகாப்பு பெற பின்வரும் விடயங்களில் கவனமாக இருக்க வேண்டுமென இடர் முகாமைத்துவ திணைக்களம் அறிவுரை வழங்குகின்றது.

அந்த வகையில் நிலத்தில் வெடிப்பு உருவாகுதல், ஆழமாகும் வெடிப்புகள் மற்றும் தரை தாழிறக்கங்கள். மரங்கள், மின் கம்பங்கள், வேலிகள், மற்றும் தொலைபேசிக் கம்பங்கள் சாய்வடைதல். சாய்வான இடங்களில் அமைந்துள்ள கட்டிடங்களின் தரைமற்றும் சுவர்களில் வெடிப்புகள் உருவாகுதல். நிலத்திலிருந்து திடீரென நீரூற்றுகள், சேற்று நீர் தோன்றுதல் மற்றும் தற்போதுள்ள நீரூற்று தடைப்படுதல் அல்லது இல்லாது போகுதல்.இவ்வாறான நிலைமைகளில் ஒவ்வொருவரும் அக்கறையுடன் கவனம் செலுத்துவதுடன் மண்சரிவுக்கு முன்னரான அறிகுறிகளை கொண்ட இடங்களிலிருந்து உடனடியாக மக்கள் அப்பால் நகர வேண்டும்.

மேலும்,பாதிப்பு ஏதுநிலையுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் மேலதிக விழிப்புடன் இருக்கவேண்டும் என்பதுடன் கடும் மழை தொடருமாயின் விரைவாக பாதுகாப்பான இடங்களுக்கு நகர ஆயத்தமாக இருக்கவேண்டும் தெரிவிக்கப்படுகின்றது .

ஆகவே, இக்கால கட்டத்தில் பொதுமக்கள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றின் அறிவுறுத்தல்களை பின்பற்றவும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலும் தற்பொழுது கண்டி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக நேற்று (27) மதியம் வரையும் 89 குடும்பங்களைச் சேர்ந்த 349 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் 50 வீடுகள் பாதியளவில் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் இதில் 50 குடும்பங்கள் தமது இருப்பிடத்தை விட்டும் வெளியேறி தமது உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் தற்காலிகமாக வசித்து வருவதாக கண்டியிலுள்ள இடர் முகாமைத்துவ பிராந்திய அலுவலகம் தெரிவிக்கின்றது.

### கிழக்கு ஏனைய...

கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்கள் நாட்டின் ஏனைய மாகாணங்களுடன் தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

மாவடிப்பள்ளி தாம்போதி ஊடாக வெள்ள நீர் 04 அடிக்கு மேல் பாய்வதனாலும் களியோடை பாலத்திற்கு அண்மையில் உள்ள "மோதீன் தாண்ட பள்ளம்" என்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த தாம்போதி தாழிறங்கியமையாலும்

கல்முனையில் இருந்து அம்பாறைக்கான போக்குவரத்தும் அக்கரைப்பற்றுக்கான போக்குவரத்தும் இரண்டு நாட்களாக பாதிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயலகப்பிரிவிலுள்ள பொலிவேரியன் சுனாமி மீள்குடியேற்ற கிராமத்தில் 05 அடிக்கு மேல் வெள்ளம் பாய்கிறது. இதே போல் கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிறீன் பீல்ட் மீள் குடியேற்ற கிராமம், பிரான்ஸ் சிற்றி மீள்குடியேற்ற கிராமம் ஆகியவற்றிலும் இதே நிலைமையே காணப்படுகிறது.

சாய்ந்தமருது , மாளிகைக்காடு பிரதேசங்களில் தாழ்வான பகுதிகளில் 03 அடிக்கு மேல் வெள்ளம் சூழ்ந்துள்ளதனால் மக்கள் வெளியேற முடியாமல் பெரும் சிரமப்படுகின்றனர்.

கல்முனை, சாய்ந்தமருது பிரதேசத்தில் சுமார் 18,000 பேருக்கு மேற்பட்டோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உறவினர் வீடுகளிலும்,

இதேவேளை நிந்தவூரில் உள்ள அரபுக்கல்லூரியைச் சேர்ந்த சம்மாந்துறை மாணவர்களை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் மாவடிப்பள்ளியில் தடம்புரண்டமையில் உழவு இயந்திர சாரதியும் மாணவர்களும் மரணமடைந்தமையால் அம்பாறை மாவட்டம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

வெள்ளநீர் வடிந்தோடும் வேகம் மந்தமாக இருப்பதனால் தொடர்ந்தும் வீதிகளிலும், வீடுகளிலும் உள்ள நீர் வடியாமல் உள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முதல் காலநிலை சீராகி உள்ளதுடன் மழைவீழ்ச்சியும் குறைந்துள்ளது.

### உழவு இயந்திரம்...

மாணவர்களை உயிருடன் மீட்டெடுத்தனர். எனினும் ஏனைய 06 மாணவர்களை மீட்க முடியாத நிலை காணப்பட்டது.

நேற்று (27) காலை தேடும் பணிகள் தீவிரப் படுத்தப்பட்டிருந்த நிலையில் நான்கு மாணவர்களுடைய சடலங்கள் குறித்த பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. உழவு இயந்திரத்தில் பயணித்த மேலும் நான்கு மாணவர்களைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஸ்ரப் தாஹிர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம, மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன், மாவட்டத்திற்குப் பொறுப்பான பொலிஸ் உயர் அதிகாரிகள், விசேட அதிரடிப்படையினர், கடற்படையினர், பிரதேச செயலாளர்கள், ஜனாஸா மீட்பு குழுவினர் என பலரும் நேற்று காலை சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமைகளைக் கண்டறிந்தனர்.

நேற்று தொடர்ந்தும் தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதேவேளை தேடும் பணியில் ஈடுபட்டிருந்த போது வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்கள் நேற்று மீட்கப்பட்டன. இந்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் தொடர்பிலும் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான ஹெலிகப்டர் ஒன்றின் மூலமும் வெள்ள அனர்த்தம் தொடர்பான கண்காணிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் இருப்போருக்கு மாவட்ட அனர்த்த மத்திய நிலையம் ஊடாக சமைத்த உணவுகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனர்த்த முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### நிலவும் சீரற்ற...

06 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், வடமேல் மாகாணத்தில் 1,893 குடும்பங்களைச் சேர்ந்த 6,615 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சப்ரகமுவ மாகாணத்தில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 193 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் 17 ஆயிரத்து 922 குடும்பங்களைச் சேர்ந்த 62 ஆயிரத்து 505 பேரும் கிழக்கு மாகாணத்தில் 36ஆயிரத்து 811 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 531 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்தில் 222 குடும்பங்களைச் சேர்ந்த 835 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மத்திய மாகாணத்தில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 546 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஊவா மாகாணத்தில் 477 குடும்பங்களைச் சேர்ந்த 1,861 பேரும், வடமத்திய மாகாணத்தில் 1,730 குடும்பங்களைச் சேர்ந்த 5,451 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கனமழையால் கணிசமான சேதம் ஏற்பட்டுள்ளதுடன், ஆறு வீடுகள் முழுமையாகவும், 561 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக, 3,102 குடும்பங்களைச் சேர்ந்த 10ஆயிரத்து 137 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும், கடும் மழை காரணமாக மூன்று மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் டி.ஐ.ஜி நிஹால் தல்துவ நேற்று (27) தெரிவித்தார்.

மேலும், சிவப்பு அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அப்பகுதி மக்கள் உடனடியாக அந்த இடங்களை விட்டு வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்படி, கண்டி மாவட்டத்தில் ஹரிஸ்பத்துவ, மெததும்பர, கங்கபட கோரலய, உடுதும்பர, யட்டிநுவர, பாத ஹேவாஹட, தெல்தோட்டை, பாததும்பர, வில்கமுவ, அம்பகமுவ, அம்பகமுவ கோறளை,

இரத்தோட்டை, நாவுல, உள்ளிட்ட பகுதிகளுக்கே இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேச மக்கள் விரைவில் அந்த இடங்களை விட்டு வெளியேறுவது முக்கியம் எனவும், அவர்களை வெளியேற்றுவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம், பொலிஸ், இராணுவம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் அதிகாரிகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

### ஓரினச்...

களிடையே பாதிப்பு விகிதம் வேகமாக அதிகரித்து வருவதாகத் தேசிய தொற்றுநோயியல் பிரிவின் இயக்குனர் சிறப்பு மருத்துவர் விந்தியா குமாரபேலி தெரிவித்தார்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களில் 15விகிதமானவர்கள் 15முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள் என்றும் மருத்துவர் சுட்டிக்காட்டினார்.

2021ஆம் மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் மாத்திரம் சுமார் 350 பேர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த தொகை 694 ஆக அதி கரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறைந்த கல்வியறிவு கொண்ட இளம் சமூகத்தில் கையடக்கத் தொலைபேசி பாவனை, புதிய தொழில்நுட்பம், போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமையே எச்.ஐ.வி தொற்று வேகமாக அதிகரிப்பதற்கு முக்கியக் காரணம் என விசேட வைத்திய நிபுணர் டாக்டர் விந்தியா குமாரபேலி தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் எச்.ஐ.வி வேகமாக பரவும் மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு நிலவரப்படி, சுமார் 5,000 எச்.ஐ.வி-யால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர், மேலும் சுமார் 3,500 பேர் சிகிச்சை பெற்று வருவதாக தேசிய தொற்று நோயியல் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

### தமிழர் தேசமெங்கும்...

சுடர் ஏற்றி நினைவேந்தல் அனு ஷ்டிக்கப்பட்டது. உயிரிழந்த வீரர்களுக்கும் தமது உறவு களுக்கும் கண்ணீர் மல்க, மலர்தூவி, சுடரேற்றி உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர். இதில் பல ஆயிரக்கணக்கான பெற்றோர்கள், உறவினர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத் தினர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு – கிழக்கில் பாதுகாப்பு தரப்பினரின் அச்சுறுத்தல் காரணமாக பல்வேறு அசௌகரியங்களுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. ஆனால், இம்முறை ஆட்சி மாற்றத்தின் பின் வடக்கு – கிழக்கு பகுதியில் மாவீரர் வாரத்தை அனுஸ்டிக்க பாதுகாப்பு தரப்பால் இடையூறுகள் ஏற்படுத்தப்படவில்லை.

இறந்தவர்களை நினைவுகூர அனுமதிக்கப்பட்டுள்ளது. அதறகு அமைவாக வடக்கு – கிழக்கில்




மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சில நாட்களாக உணர்வெழுச்சியுடன் இடம்பெற்று வருகிறது. இதில் மாவீரர்களின் திருவுருவப்படங்களும் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கண்ணீர் மல்க நினைவேந்தல்களில் ஈடுபட்டனர்.

இறுது நிகழ்வுக்காக நாளை மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்பரவு செய்யப்பட்டு சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில், அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு உடும்பன்குளம் மாவீரர் துயிலுமில்லம், மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை மாவீரர் துயிலுமில்லம், தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம், கண்டலடி மாவீரர் துயிலுமில்லம், மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லம், திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், தியாகவனம் மாவீரர் துயிலுமில்லம், பெரியகுளம் மாவீரர் துயிலுமில்லம், உப்பாறு மாவீரர் துயிலுமில்லம், மணலாறு மாவட்டத்தில் கோடாலிக்கல் மாவீரர் துயிலுமில்லம், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லம் அருகாமை, மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம், பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம், முள்ளிக்குளம் மாவீரர் துயிலுமில்லம், முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம், விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லம், அளம்பில் மாவீரர் துயிலுமில்லம், ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம், கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், சாட்டி மாவீரர் துயிலுமில்லம், எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் என்பவற்றில் உணர்வுபூர்வமான அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

### இரத்தினபுரியில்...

நடைபெற்ற எலிக்காய்ச்சலைத் தடுக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இரத்தினபுரி மாவட்டத்தில் தற்போதைய ஆய்வின் பிரகாரம் அதில் 22 பேர் உயிரிழந்துள்ளதுடன், 882 எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தில் குறிப்பாக எஹலியகொட, கிரியெல்ல, எலபாத்த, பெல்மடுல்ல, ஓபநாயக்க, நிவித்திகல, கலவான மற்றும் கல்தொட்ட ஆகிய பிரதேசங்கள் எலிக்காய்ச்சல் அபாயம் உள்ள பிரதேசங்களாக தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆகவே, குறித்த பகுதிகளில் எலிக்காய்ச்சல் பரவுதற்கான அறிகுறிகள் இருப்பின் அதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொதுமக்களை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### 1480 முன்பள்ளி...

பணிப்புரைக்கு அமைய வடமத்திய மாகாணத்தில் உள்ள 94 முஸ்லிம் மற்றும் தமிழ் பாடசாலைகள் இம்மாதம் 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை மூடப்படும் என மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்துள்ளார். மோசமான வானிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் மீண்டும் முன்பள்ளி திறக்கும் திகதிகள் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### கிழக்கில் ஓய்ந்தது...

எறிக்கவில்லை. அங்கே புதனன்று மிதமான மழை வீழ்ச்சி விட்டு விட்டு இருந்தது. பெருக்கெடுத்து வரும் வெள்ள நீரையும் எப்படியாவது ஆறு குளங்களிலிருந்து அவசரமாக வெளியே ற்றி கடலுக்குள் அனுப்பிவிட வேண்டும் என்பதில் மக்களும் தன்னார்வத்த தொண்டர்களும் அலுவலர்களும் முப்படையினரும் கூட சேர்ந்து எல்லோரும் தீவிரமாக இருந்ததைக் காண முடிந்தது.




வடக்கு – கிழக்கில் நேற்று (27) உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. கொட்டும் மழையைப் பொருட்படுத்தாமல் வவுனியாவில் பிரதான மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள ஈச்சங்குளம் பகுதியிலுள்ள மைதானத்தில் உணர்வெழுச்சியுடன மாவீரர் நாள் அனுஷ்ட்டிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்– கி.வசந்தன்)

# இரணைமடுக்குளத்தின் 14 வான் கதவுகளும் திறப்பு

## கிளிநொச்சியில் மக்கள் இடம்பெயர்வு



வடக்கின் மிகப்பெரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் 14 வான் கதவுகளும் நேற்று (27) திறக்கப்பட்டன. இதனால் பெருமளவான வெள்ள நீர் வெளியேறி மக்கள் குடியிருப்புக்கள், விவசாய நிலங்களை சூழ்ந்ததால் மக்கள் வெளியேறியதுடன் பலரது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி சிவபுரம் பகுதியில் வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். தற்பொழுது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக பலர் இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் 1043 குடும்பங்களைச் சேர்ந்த 3524 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வட்டக்கச்சி ஊடாக கண்டாவலை செல்லும் பிரதான வீதியில் புளியம்போக்கனை பகுதியில் வீதி குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதன் காரணமாக பெரியகுளம் வட்டககச்சி செல்லும் வீதி முற்றாகத் தடைப்பட்டுள்ளது.



## திருமலை மாவட்டத்தில் சுமார் 4500 பேர் பாதிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக 1537 குடும்பங்களைச் சேர்ந்த 4385 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 43 குடும்பங்களைச் சேர்ந்த 106 பேர் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 435 குடும்பங்களைச் சேர்ந்த 1390 பேர் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். மேலும் 06 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதென திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை (26) பிற்பகல் 04.00 மணிக்குப் பெறப்பட்ட புள்ளி விபரத் தகவலின் படி சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 83 பேரும், மூதூர் பிரதேச செயலகத்தில் 938 குடும்பங்களைச் சேர்ந்த 2574 பேரும், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் 43 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேரும், மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் 06 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும், பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் 177 குடும்பங்களைச் சேர்ந்த 617 பேரும், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் 338 குடும்பத்தைச் சேர்ந்த 948 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என மேலும் அவர் கூறினார்.

## இடர்ப்பாடுகள் தொடர்பில் அறிவிக்க

# தமிழ் பேசும் மக்களுக்கென பிரத்தியேக அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம்

நாட்டில் சீரற்ற வானிலை நிலவி வருவதால் தொடர்ச்சியாக ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள், இடர்ப்பாடுகள் தொடர்பில் அறிவிக்க தமிழ் பேசும் மக்களுக்கென பிரத்தியேகமாக அவசர தொலைப்பேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ் பேசும் மக்கள் 107 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு அனர்த்தம் தொடர்பில் அறிவிக்க முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இதேவேளை நாடளாவிய ரீதியில் மோசமான காலநிலை காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளின் போதான அவசர சூழ்நிலைகளை அறிவிப்பதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் 24 மணிநேர தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, 0112 027 148, 0112 472 757, 0112 430 912 மற்றும் 0112 013 051 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தகவல்களை அறிவிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

disaster.ops@police.gov.lk என்ற மின்னஞ்சல் மூலமும் அந்த மையங்களைத் தொடர்புகொள்ள முடியும். பொலிஸ் தலைமையகத்தில் இந்த விசேட நடவடிக்கை மையம் நிறுவப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மீட்பு நடவடிக்கைகளில் விமானப்படை மும்முரம்



சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கண்காணிக்க விமானப்படை தொடர்ந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, நேற்று (27) விமானப்படையின் இல 07ம் படைப்பிரிவைச் சேர்ந்த பெல் 212 ஹெலிகொப்டர் அம்பாறை பகுதிக்கு கண்காணிப்புக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளின் போது ஏறாவூர் மைலவ ட்டவான் பிரதே சத்தில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியிருந்த ஒருவர் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டு, பின்னர் மட்டக்களப்பு விமானப்படைத் தளத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார்.



முல்லைத்தீவு மாவட்டம் குளமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவில் பெருக்கெடுத்த ஆற்று நீரால் பாதிக்கப்பட்ட மக்களை அப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவப் படையினர் பல முயற்சிகளின் பின்னர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்திகை மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** உடல் நோயில் இருந்து மீண்டு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**ரிஷபம்** முதியவர்கள் தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

**மிதுனம்** எதிர்பார்க்கும் முடிவு கிடைப்பதற்காக கடனமாக உழையுங்கள்.

**கடகம்** பாதுகாப்பான முதலீட்டில் முதலீடு செய்தால் நல்ல பணம் சம்பாதிக்கலாம்.

**சிம்மம்** உங்கள் பணத்தையும் நேரத்தையும் வீணடிக்கும் நபர்களிடமிருந்து விலகி இருக்க கற்றுக்கொள்ளுங்கள்.

**கன்னி** விரைவாக பணம் சம்பாதிக்கும் ஆசை இருக்கும்.

**துலாம்** அதிகமான மகிழ்ச்சி சில பிரச்சினைகளை ஏற்படுத்தும் உற்சாகத்தைக் கட்டுப்படுத்துங்கள்.

**விருட்சிகம்** சரியான கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பு துணைவருடன் உறவை மேம்படுத்தும்.

**தனுசு** உணர்வுகளையும் மன அழுத்தத்தையும் உள்ளேயே அடக்கி வைத்துக் கொள்ளக் கூடாது.

**மகரம்** முதலீடு பெரும்பாலும் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும

**கும்பம்** நீண்ட காலமாக நிதி நெருக்கடியைச் சந்தித்தவர்கள், இன்று பணம் பெறலாம.

**மீனம்** இடையூறு செய்யதவர்கள் இன்று உங்கள் கண் எதிரே மோசமான வீழ்ச்சியை சந்திப்பார்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** ஏகாதசி திதி அதிகாலை 05:23 AM அதன் பிறகு துவாதசி திதி.
**நட்சத்திரம்:** அஸ்தம் நட்சத்திரம் காலை 06:35 AM அதன் பிறகு சித்திரை நட்சத்திரம்.
**யோகம்:** மரண சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** பூரட்டாதி.
**இராகு காலம்:** மதியம் 12:00 PM முதல் 01:30 PM வரை,
**குளிகை:** காலை 10:30AM முதல் 12:00 PM வரை,
**எமகண்டம்:** காலை 07:30AM முதல் 09:00AM வரை,

# நயன்தாரா மீது தனுஷ் வழக்கு!

நடிகை நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன் ஆகியோரின் திருமண ஆவணப்படத்தில் “நானும் ரௌடிதான்” திரைப்படத்துடன் தொடர்புபட்ட காட்சிகளை அனுமதியின்றி பயன்படுத்தியதற்காக நயன்தாரா மற்றும் நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனத்தின் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் நடிகர் தனுஷ் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

நடிகர் தனுஷ் தொடர்ந்த இந்த வழக்கில் நயன்தாரா, விக்னேஷ் சிவன் இருவரும் பதிலளிக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# 1.6 மில்லியன் மதிப்புள்ள கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது



இராணுவப் புலனாய்வுப் பிரிவின் புலனாய்வு தகவலுக்கமைய நொச்சியாகம பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 1.6 மில்லியன் பெறுமதியான கேரள கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த நபர் ஒருவரை நொச்சியாகம பொலிஸார் செவ்வாய்க்கிழமை (26) கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரிடம் 5.5 கிலோகிராம் கேரள கஞ்சா விற்பனைக்காக வைத்திருந்ததுடன், நீண்டகாலமாக இந்த சட்டவிரோத கடத்தலை மேற்கொண்டு வந்துள்ளார். அனுராதபுரம், விஜேபுர பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக சட்ட நடவடிக்கைகளை நொச்சியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## பண்டிகைக் கால பதுக்கல்கள்: தடுக்குமா அநுரகுமார அரசு..?

இந்த வார இறுதியுடன் நவம்பர் மாதம் நிறைவடைந்து, பண்டிகை மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

நத்தார் பண்டிகையில் ஆரம்பித்து புதுவருடப் பிறப்பு, தைப்பொங்கல் என தொடர்ந்து பண்டிகைகள் என்பதால் மக்களும் அதற்கேற்ற வகையில் தயாராகி வருகின்றனர்.

மக்கள் தயாராகி வருவது ஒருபுறம் இருக்க முதலாளிமாரும் விலையேற்றத்துக்கு தயாராகி வருகின்றனர். அதன் முதல் முயற்சியை அரிசியில் ஆரம்பித்துள்ளனர்.

தற்போது நாட்டில் அதிகளவில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, தேவைக்கேற்ற அளவில் அரிசியைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் நுகர்வோர் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அரிசியில் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி முதலாளிமார் மக்கள் துன்பத்தில் குளிர்காய்ந்து வருகின்றனர்.

கடந்த தினங்களில், பயன்பாட்டிற்கு உதவாத அரிசித் தொகை, மற்றும் உற்பத்தி திகதிகளை மாற்றி சந்தைக்கு வெளியிட தயார் நிலையில் வைத்திருந்த அரிசி கையிருப்பு, என பல செய்திகளை காணக்கூடியதாக இருந்தது.

இவை அனைத்தும் எதிர்வரும் பண்டிகை காலத்தில் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் நோக்கில் ஆகும்.

அரிசியில் மாத்திரமன்றி, முட்டை, கோதுமை மா, மாஜரின் போன்ற பண்டிகைக் கால பொருட்கள் அனைத்திற்கும் தற்போது செயற்கையான ஒரு தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இலங்கையில் பொதுவாகவே டிசம்பர் மாதத்தில் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குவது வழக்கம். இது காலங்காலமாக இலங்கையில் இடம்பெற்று வருகிறது.

டிசம்பர் மாதத்தில் நிலவும் காலநிலை காரணமாக இறக்குமதி செய்யும் கப்பல்கள் எதுவும் இலங்கைக்கு வருகைத் தராது என்பதை அறிந்த முதலாளிமார், அதனை சாதகமாகப் பயன்படுத்தி ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை பதுக்கி வைத்து அதனை பண்டிகை காலத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்ய திட்டம் தீட்டி வருகின்றனர்.

இந்த மக்களை சுரண்டும் அநாகரிக செயல் காலங்காலமாக இடம்பெற்று வருகிறது. இதனை அரசாங்கம் கண்டுக்கொள்வதும் இல்லை. அதற்கான சரியான தீர்வுகளை வழங்குவதும் இல்லை.

இந்த நிலையை கட்டுப்படுத்துவதாக அரசாங்கம் கூறினாலும் கூட உள ரீதியாக இவ்விடயம் தொடர்ந்து வருகிறது.

இவ்வாறு அரிசி உள்ளிட்ட முக்கிய பண்டிகைக்கால நுகர்வுப் பொருட்களை பதுக்கி வைக்கும் முதலாளிமாரை அன்று தொடக்கம் இன்று வரையில் பாதுகாப்பதே அரசியல் தலைமைகளின் தொடர் பணியாக உள்ளது.

மகிந்த, மைத்திரி, ரணில் உள்ளிட்ட அனைத்து ஆட்சியாளர்களும் இதைத்தான் செய்து வந்தார்கள், ஆட்சிக்கு யார் வந்தாலும் முதலாளிமாரை போஷணையாக்கும் இந்த செயற்பாடு தொடர்ந்து வருகிறது. அதற்கான காரணம் தேர்தல் காலங்களிலும், அதற்கு அப்பாற்பட்ட அரசியல் சூழல்களிலும் பல முதலாளிமார், வர்த்தக பிரதானிகள் அரசியல் தலைமைகளுக்கு முதலீடு செய்து வருகின்றனர். அதற்கு ஈடு செலுத்தும் விதமாக அரசியல் பலத்தை பயன்படுத்தி முதலாளிமாரை பாதுகாக்க ஆரம்பிக்கின்றனர்.

இந்த பாதுகாப்பு தான், திட்டமிட்ட விலையேற்றங்களுக்கும், பதுக்கல்களுக்கும் அடித்தளம் இடுகின்றது. அதனால் தான் முதலாளிமார் நினைத்ததை செய்யத் துணிகின்றனர்.

இவ்வாறு ஒரு செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அதிக விலையேற்றத்துக்கு பொருட்களை விற்கும் போது, வேறு வழியின்றி மக்கள் அதனை நுகர வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனையும் தாண்டி சாதாரண ஒரு கூலித் தொழிலாளியால் பண்டிகையை கொண்டாட முடிவதில்லை.

சுய நலன்களை கருத்தில் கொண்டு இவ்வாறு பொருட்களை பதுக்கி வைத்து பின்னர் பொருட்களின் விலையை ஏற்றுவதால் அவதியுறப் போவது சாதாரண மக்கள் மாத்திரமே.

ஆக, மாற்றத்தை எதிர்ப்பார்த்து மக்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த அரசாங்கமும் முதலாளிமாரை பாதுகாக்குமாக இருந்தால் மறுபடியும் ஏமாற்றப்படுபவர்கள் மக்களே.

அநுர அரசாங்கம் இந்த நிலையை தொடர விடக்கூடாது. முதலாளிமாரின் இந்த சதித் திட்டங்களை அரசாங்கம் முறியடிக்க வேண்டும்.

ஏற்கனவே, பொருளாதார நெருக்கடி, வரிச் சுமை, விலையேற்றம் போன்ற காரணங்களால் நசுக்கப்பட்டு அதிலிருந்து வெளியே வரத் துடித்துக் கொண்டிருக்கும் பொதுமக்களை இதற்கு மேலும் வருத்த இடமளிக்க முடியாது.

கடந்த அரசாங்கங்கள் பொதுமக்களின் வாழ்க்கையோடு விளையாடிய சீரழிவுகள், இந்த அரசாங்கத்திலும் தொடரக்கூடாது என்பதே அனைத்து மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கத்தில் காணப்பட்ட வரிசை யுகத்தின் ஆரம்பம் விலையேற்றமும், வரி ஏற்றமுமே ஆகும். ஆகவே, மற்றுமொரு வரிசை யுகத்தை நிச்சயம் மக்கள் விரும்ப மாட்டார்கள். பொருட்களின் விலை சாதாரண ஒருவரால் நுகரக்கூடிய அளவிற்காவது குறைவடைய வேண்டும். பண்டிகைக் காலத்திலாவது மக்களுக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

முதலாளித்துவ சுரண்டல் நிலையிலிருந்து மக்களை விடுவித்து, பாதுகாக்க இந்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன், மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது முக்கியம். மேடைகளில் வெறும் சாக்கு போக்குகளை சொல்லி சமாளிக்கும் நிலை இனியும் வேண்டாம்!

# கிழக்கில் தொடரும் வெள்ள அவலம்

## குளங்கள் அனைத்தும் திறந்து விடப்பட்டுள்ளன

கிழக்கில் கடந்த நான்கு தினங்களாக கொட்டிய அடை மழை நேற்றுடன் ஓய்ந்தது. அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் நான்கு தினங்களுக்குப் பின்னர் மக்கள் சூரியக் கதிர்களை காலையிலேயே காணக்கூடியதாக இருந்தது. வெயில் எரித்தது. இதனால் மக்கள் பெரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

வீடு வாசல்களில் தேங்கியிருந்த வெள்ள நீரையும் சேறு சகதியை அகற்றுவதிலும் உடுதுணிகளைக் கழுவி காயப்போடுவதிலும் மக்கள் பெரிதும் ஈடுபட்டிருந்தார்கள்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இந்த நிலைமை என்றாலும் திருகோணமலையில் வெயில் எரிக்கவில்லை. அங்கே நேற்றைய தினம் மிதமான மழை வீழ்ச்சி விட்டு விட்டு இருந்தது.

பெருக்கெடுத்து வரும் வெள்ள நீரையும் எப்படியாவது ஆறு குளங்களிலிருந்து அவசரமாக வெளியேற்றி கடலுக்குள் அனுப்பிவிட வேண்டும் என்பதில் மக்களும் தன்னார்வ தொண்டர்களும் அலுவலர்களும் முப்படையினரும் கூட சேர்ந்து எல்லோரும் தீவிரமாக இருந்ததைக் காண முடிந்தது.

அதன்படி, வான்மழை நீரை வழிந்தோடச் செய்வதற்காக கிட்டத்தட்ட கிழக்கு மாகாணத்தில் நிரம்பி வழியக் கூடிய நிலையில் இருந்த எல்லாக் குளங்களும் திறந்து விடப்பட்டன.





இதுவரை இருந்து வந்த இயற்கைவழி முகத்துவாரங்கள் பெருக்கெடுத்து வரும் வெள்ள நீரை வெளியேற்றுவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. இதனால் எப்படியாவது கரைபுரண்டோடும் நீரை கடலுக்குள் அப்புறப்படுத்த வேண்டும் என்பதில் எல்லா யோசனைகளும் வழிவகைகளும் கையாளப்பட்டன. கடலை அண்டிய முகத்துவாரப் பகுதிகளில் உயிர்ப் போராட்டத்தின் மத்தியில் நீர் ஓடும் வழிகள் வெட்டித் திறந்து விடப்பட்டன.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலிருந்து மட்டக்களப்பு நகருக்குள்ளும் அதனை அண்டிய பகுதிகளுக்குள்ளும் பெருக்கெடுத்து வந்த வெள்ள நீரை எல்லா வழிகள் மூலமும் வங்கக் கடலுக்குள் வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்புக்குத் தெற்கே உள்ள படுவான்கரைப் பிரதேச மக்கள் வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளார்கள். அதுபோல முந்தானை ஆற்றை அண்டி வாழும் மக்களும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு பதுளை வீதிப் பகுதியில் உள்ள ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாவடிஓடை, ஈரலக் குளம், வண்ணாத்தியாறு போன்ற இடங்களில் வெள்ளத்தால் சூழப்பட்டு சிக்கியிருந்தவர்களை இலங்கை விமானப் படையின் உதவியுடன் ஹெலிகொப்டர் மூலம் மீட்டதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்திருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன மத பேதமற்று உதவுவதில் எல்லா சமூகத்து மனித நேயப் பணியாளர்களும் சமூக வலைத்தளங்கள் மூலம் உதவிகளை ஒருங்கிணைத்து உதவிக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும் வெள்ள இடரை தக்க முறையில் எதிர்கொள்வதற்குரிய ஆயத்தங்கள் திருப்தியளிக்கக்கூடிய வகையில் இல்லாதிருந்ததாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியன் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் வெளிப்படுத்தியுள்ள தனது ஆதங்கததில், அடை மழை வெள்ளம் காரணமாக போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் கடற்படையினரால் தகுந்த ஏற்பாடுகள் முன்னரே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். சூறாவளிக்கான முன்னறிவிப்பு மூன்று நாட்களுக்கு முன்னரே விடுக்கப்பட்டிருந்த வேளையிலும் முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணத்தினால் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை சந்திக்க வேண்டிய அவல நிலை உருவாகியுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் படுவான்கரையிலுள்ள தமது இருப்பிடங்களுக்கு செல்ல முடியாது தவித்த வேளை எனது தலையீட்டினால் படகு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் இலங்கை போக்குவரத்து சபையுடன் தொடர்பினை மேற்கொண்டு பேரூந்து சேவைகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.


புதிய அரசாங்கத்தினுடைய அனுபவமற்ற தன்மை இங்கு வெளிப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் முடிந்தளவு எம்மால் இயன்ற பணிகளை மேற்கொள்வோம். மேலும் வெள்ள நீர் மட்டம் அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி மக்களுடன் மக்களாக நின்று மக்களுக்கான உதவிகளை மேற்கொள்வோம்.” என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கிழக்கு மக்கள் தாழமுக்கம், சூறாவளி, பலத்த மழை, பெரு வெள்ளம் எனக் கூறப்பட்ட அச்ச நிலையைக் கடந்து புதனன்று நிம்மதிப் பெருமூச்சு விட்டதுடன் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

பொதுவாகவே கிழக்கு மக்கள் அடைமழை, வெள்ளம், வரட்சி, சுனாமி, சூறாவளி என கிழக்கை வாட்டி வதைக்கும் எல்லா இயற்கை இடர்களுக்கும் முகம் கொடுக்கிறார்கள். இதில் மனித வேறுபாடுகளான தமிழ், முஸ்லிம் சிங்களம் என்ற பேதம் எதனையும் இயற்கை பார்ப்பதில்லை. மாரிகாலம் வந்து விட்டால் அடைமழை, பெருவெள்ளம், சூறாவளி மற்றும் சுனாமி என்று எதிர்ப்படும் எல்லா வகையான இடர்களையும் எதிர்பார்த்து இவர்கள் காலம்கழிக்க வேண்டியதாகி விடுகின்றது. இன்னும் சொல்லப் போனால் கிழக்கு மக்களின் வாழ்வு சோதனைக்கு உள்ளாக்கப் படும் ஒரு கால கட்டமாகவும் இது அமைந்து விடுகிறது.



ஏ.எச்.ஏ. ஹுஸைன்



# இறக்குமதி அரிசி: உற்பத்தி திகதியை மாற்றி சந்தைக்கு அனுப்ப முயற்சி

கனுஷியா புஷ்பகுமார்

உற்பத்தி திகதியை எதிர்வரும் இரண்டரை வருடங்கள் முன்னால் குறிப்பிட்டிருந்த 17,925 கிலோ அரிசி கையிருப்பு கொழும்பு-14 பிரதேசத்தில் உள்ள களஞ்சியசாலை ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் இதனை தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் கையிருப்பின் உற்பத்தி திகதி மற்றும் அது தொடர்பிலான ஏனைய தகவல்களை மாற்றியமைத்து சந்தைக்கு விடுவிக்க தயார் நிலையில் இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட 25 கிலோ அரிசி பொதிகளில் , உற்பத்தி திகதி 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் என குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் உற்பத்தி திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.



17,925 கிலோ அரிசி கண்டெடுப்பு

அரிசியை இறக்குமதி செய்த வர்த்தகர், பொதிகளின் உற்பத்தித் திகதியை மாற்றி, 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் என குறிப்பிட்டு பொதி செய்திருந்ததுடன், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் குறித்த அரிசி கையிருப்பை சந்தைக்கு வெளியிட திட்டமிட்டுள்ளதாக ஹேமந்த சமரகோன் கூறினார்.

மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தில் வினாடிக்கு 32,145 கன அடி நீர் திறப்பு

நாட்டின் பல நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதாகவும் பெரும்பாலான ஆறுகள் பெருக்கெடுத்து வருவதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.நேற்றுக்காலை (27) நிலவரப்படி தெதுரு ஓயா நீர்த்தேக்கத்திற்கு வினாடிக்கு 32,145 கனஅடி நீர் திறந்துவிடப்படுவதாக அதன் பொறியாளர் ஜி. டபிள்யூ. ஏ. சதுரா தில்தாரா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வாரியபொல, நிகவெரட்டிய, மஹவ, கொபேகனே, பிங்கிரிய, பல்லம, ஹலவத்தை, ஆராச்சிக்கட்டுவ, ரஸ்நாயக்கபுர ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட தாழ்நில பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு சதுரா தில்தாரா கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில், ராஜாங்கனை நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 3,520 கன அடியும், கவுடுல்ல நீர்த்தேக்கத்திற்கு வினாடிக்கு 1,000 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

மேலும், யான் ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 6,099 கன அடியும், பராக்கிரம கடலில் இருந்து வினாடிக்கு 5,046 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதேவேளை, மகாவலி ஆற்றின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களும் வெள்ளத்தில் பாதிக்கும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் மேலும் தெரிவிக்கிறது.

## இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தலைமையகத்துக்கு சபாநாயகர் விஜயம்

சபாநாயகர் கலாநிதி அசோக சப்புமல் ரன்வல அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தலைமையகத்துக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்து, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுடன் சிநேகபூர்வ சந்திப்பில் ஈடுபட்டார்.

ஜம்இய்யாவின் பொதுச் செயலாளர் அஷ்-ஷைக் எம். அர்கம் நூராமித் ஜம்இய்யாவின் வரலாறு மற்றும் இலங்கை முஸ்லிம்களின் நிலை குறித்த அறிமுகத்தை வழங்கினார். மேலும், ஜம்இய்யா செயல்படுத்தி வரும் பல்துறை பணிகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.





மேலும்இலங்கையில் சகவாழ்வு மற்றும் மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த, ஜம்இய்யா ஒரு அரசியல் சார்பற்ற மத அமைப்பாக செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை சார்பில் அதன் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், உப தலைவர், உப செயலாளர் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் என பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கையை மீட்பதற்கு சீனா உதவவேண்டும்

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்து வரும் நட்புறவை மேலும் பேணுவது குறித்தும் தற்போதைய வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கையை மீட்டுவதற்கு தேவையான ஒத்தாசையையும் தலையீட்டையும் தொடர்ந்து வழங்குமாறும் சீனப் பிரதிநிதிகளிடம் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தூதுக் குழுவினர் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவை நேற்றுமுன்தினம் சந்தித்த போதே இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.



இதன்போது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான திணைக்களத்தின் (IDCPC) துணை அமைச்சர் சன் ஹையன் (Sun Haiyan) தலைமையிலான சீனத் தூதுக்குழுவினரே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்து கலந்துரையாடினர்.

சீன தூதுக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான திணைக்களத்தின் (IDCPC) துணை அமைச்சர் சன் ஹையன் (Sun Haiyan), சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் Lin Tao, பணிப்பாளர் Li Jinyan, பிரதிப் பணிப்பாளர் Wen Jun, துணை அமைச்சரின் செயலாளர் Jin Yan, மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரியும் Zhang Guyu ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, ஹர்ஷன ராஜகருணா, வைத்தியர் காவிந்த ஜயவர்தன, எஸ். எம். மரிக்கார் மற்றும் கயந்த கருணாதிலக உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரத்நாயக்க அபேரத்ன மற்றும் சஹன் கிரிந்தகே ஆகியோரும் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

## சொல்வதெழுதல் போட்டியில் முதலாமிடம்

எம்.யூ.எம்.சனூன்

கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை ஆங்கில தினப் போட்டியில் தரம் 08 க்குரிய சொல்வதெழுதல் (Dictation) போட்டியில் சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியின் மாணவி ஆர்.ஆர்.அமதுல்லாஹ் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்று சாதித்துள்ளார்.

இதன் மூலம் இம்மாணவி அதிபர் உட்பட ஒட்டுமொத்த பாடசாலை சமூகத்துக்கும் பெருமை சேர்த்துத் தந்திருக்கிறார்.

பாடசாலை நிர்வாகம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை இம்மாணவிக்கும், ஆங்கிலப் பிரிவின் ஆசிரியர்களுக்கும் மற்றும் மாணவியின் பெற்றோர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறது.



## நீர்ப்பாசனத் திணைக்களம், நீர்த்தேக்கங்களுக்கான அதிகாரிகளின் விடுமுறைகள் ரத்து

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

நிலவும் சீரற்ற வானிலையினால் ஏற்பட்டுள்ள அடைமழை வெள்ளம் காரணமாக நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோரின் விடுமுறைகள் நிலைமை சீராகும் வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையின் நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தமது பணியிடங்களில் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது விடுமுறை கோரியுள்ள அதிகாரிகளின் விடுமுறை இரத்துச் செய்யப்படுவதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்பு பயிற்சி பட்டறை

எம். எச்.எம். சியாஜ்

கற்பிட்டி செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் கற்பிட்டி செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் தலைமையகத்தில் பெண்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்பு பயிற்சி பட்டறை நடைபெற்றது. பயிற்சி பட்டறையை நிறைவு செய்த வர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் கடந்த திங்கட்கிழமை (25) கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபத்தில் செடோ நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ ஆர்.எம் முனாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அதிதிகளாக கற்பிட்டி பிரதேச செயலக உதவி செயலாளர் சந்தியா பிரியதர்ஷினி, தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் சிரேஷ்ட ஆய்வாளர் சந்தன ரத்நாயக்க, கள உத்தியோகத்தர் அனுருந்த சுவர்வீர மற்றும் கற்பிட்டி நிர்வாக கிராம உத்தியோகத்தர் பீ .எம். எம். பைனஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் விசேட அதிதிகளாக கற்பிட்டி பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தித் உத்தியோகத்தர் சாந்திலதா, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சிரானி சமரசிங்க, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் வாயிஷா மற்றும் சமூக செயற்பாட்டாளர் என் மஞ்சுளா ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனருடன் பயிற்சி நெறியை வெற்றி கரமாக பூர்த்தி செய்த மகளிர் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.





# இஸ்ரேல்–ஹிஸ்புல்லா போர் நிறுத்தம்

## லெபனானில் முடிவுக்கு வந்தது ஆயுத மோதல்





ஆர்.மனோசங்கர்

லெபனானில் இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே 13 மாதங்களாக நீடித்து வந்த ஆயுத மோதலை முடிவுக்கு கொண்டு வர போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தம் ”உள்ளூர் நேரப்படி புதன்கிழமை (நவ,27) அதிகாலை 04:00 மணிக்கு நடைமுறைக்கு வந்துள்ளது என்றும், லெபனான்–இஸ்ரேல் எல்லையில் மோதல் முடிவடையும்” என்றும் பைடன் தெரிவித்துள்ளார்.

இது ”பகைமைகளை நிரந்தரமாக நிறுத்துவதை” நோக்கமாகக் கொண்டுள்ளது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஏதேனும் ஒரு பகுதியை ஹிஸ்புல்லா மீறினால், தாக்குதல் நடத்தத் தயங்காது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இதனிடையே, 2023 ஒக்டோபர் முதல் இஸ்ரேலுடன் ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள ஈரான் ஆதரவு பெற்ற ஆயுதக் குழுவான ஹிஸ்புல்லாவிடம் இருந்து போர் நிறுத்தம் குறித்த எந்த அறிவிப்பும் வெளியாகியிருக்கவில்லை.

### ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் வரை சண்டை

இரு தரப்பினருக்கு இடையினால் மோதலின் உச்சக் கட்டமாக கடந்த செப்டம்பர் இறுதியில் இஸ்ரேல் குண்டுவீச்சுகளை தீவிரப்படுத்தியதுடன், தரைப்படை ஆக்கிரமிப்பையும் தொடங்கியது.

பல தசாப்தங்களில் லெபனானில் நடந் மிக மோசமான மோதலாக இது பதிவாகியுள்ளது. இந்த மோதலில் 3,823 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில், திட்டமிட்டபடி புதன்கிழமை அதிகாலை போர் நிறுத்தம் தொடங்கியது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்கு சற்று முன்பு வரை இரு தரப்பு தாக்குதல்களும் பதிவு செய்யப்பட்டன.

இஸ்ரேல் போர்நிறுத்த காலக்கெடுவிற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்னதாக பெய்ரூட்டின் சில பகுதிகளில் இருந்து பொது மக்களை வெளியேற்ற உத்தரவுகளை பிறப்பித்திருந்தது.

அதேபோல், போர் நிறுத்தப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு ஹிஸ்புல்லா இஸ்ரேல் மீது ஆளில்லா விமானங்களை கொண்டு தாக்குதல் நடத்தியிருந்து.

இந்த ஒப்பந்தத்தின்படி, லெபனானின் தெற்கில் இருந்து இஸ்ரேல் படிப்படியாக தனது துருப்புக்களை திரும்பப் பெறும் எனவும், லெபனான் அரசாங்கப் படைகள் தற்போது ஹிஸ்புல்லாவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை கைப்பற்றும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மீறினால் மீண்டும் தாக்குவோம்

2006 இல் இஸ்ரேல்–ஹிஸ்புல்லா போரின் முடிவில் நிறுவப்பட்ட எல்லையான லிட்டானி ஆற்றின் தெற்கே உள்ள பகுதியிலிருந்து ஹிஸ்புல்லா போராளிகளும் ஆயுதங்களும் அகற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

”இந்த அறிவிப்பு நீடித்த அமைதியை மீட்டெடுப்பதற்கான நிலைமைகளை உருவாக்கும் எனவும் இரு நாடுகளிலும் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளுக்கு பாதுகாப்பாக திரும்ப அனுமதிக்கும்” என்று அமெரிக்கா மற்றும் பிரான்சின் கூட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹிஸ்புல்லா மீறினால் இராணுவ நடவடிக்கை மூலம் பதிலடி கொடுக்க இஸ்ரேல் உரிமை கோரியுள்ளது.

”சர்வதேச சட்டத்திற்கு இணங்க தற்காப்பு உரிமையை இஸ்ரேல் தக்க வைத்துக் கொண்டுள்ளது” என்று அமெரிக்க ஜனாதிபதி பைடன் அறிவித்துள்ளார்.

ஹிஸ்புல்லா ஒப்பந்தத்தை மீறி ஆயுதம் ஏந்த முயற்சித்தால் அல்லது எல்லைக்கு அருகே பயங்கரவாத உள்கட்டமைப்பை மீண்டும் உருவாக்க முயன்றால், தாக்குவோம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறியுள்ளார்.

இஸ்ரேலும் ஹிஸ்புல்லாவும் நீண்ட காலமாக எதிரிகளாக இருந்து வந்தன. எனினும், கடந்த 13 மாதங்களாக காசா பகுதியில் நடந்த போரினால் ஆயுத மோதல் தீவிரமடைந்தது.

2023 ஒக்டோபர் எழாம் திகதி தெற்கு இஸ்ரேல் மீது காசாவின் ஹமாஸ் குழுவினர் தாக்குதலை நடத்திய ஒரு நாளுக்குப் பிறகு, ஹிஸ்புல்லா இஸ்ரேலுக்குள் ஏவுகணை தாக்குதலை நடத்தியது. இதில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாக காசா மீதும், ஹிஸ்புல்லா அமைப்பினர் மீதும் இஸ்ரேல் தனது கொடூர தாக்குதலை முன்னெடுத்திருந்தது. இதில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொள்ளப்பட்டனர்.

குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் போரில் கொல்லப்பட்டனர். இதனால் இஸ்ரேல் சர்வதேச சமூகத்தின் கடும் எதிர்ப்பை சந்திக்க நேரிட்டது. இந்நிலையிலேயே, தற்போது போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. போர்நிறுத்தத்தை நிர்வகிப்பதற்கு அமெரிக்க துருப்புக்கள் எதுவும் நிறுத்தப்படாது என்பதை பைடன் உறுதிப்படுத்தினார்.

### லெபனான் பிரதமர் வரவேற்பு

லெபனானின் பிரதமர் நஜிப் மிகாட்டி போர் நிறுத்த ஒப்பந்தத்தை வரவேற்றார், இது நாட்டில் ”அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான ஆரம்ப நிலை ” என்றும் பொது மக்களை வீடு திரும்ப அனுமதிக்கும் செயல் என்றும் கூறினார்.

ஆனால் இஸ்ரேல் இந்த ஒப்பந்தத்திற்கு ”முழுமையாக இணங்க வேண்டும்” என்றும், அது தற்போது ஆக்கிரமித்துள்ள இடங்களிலிருந்து வெளியேற வேண்டும் என்றும், 2006ல் கடைசி இஸ்ரேல் ஹிஸ்புல்லா போரின் முடிவில் முன்னர் அமைக்கப்பட்ட ஐநா தீர்மானத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

இந்த மோதலினல் லெபனானில் 8.5 பில்லின் டொலர் பொருளாதார இழப்புகள் மற்றும் சேதங்களை உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. ஆனால், இதற்கு எப்படி நிதியளிக்கப்படும் என்பது அறிவிக்கப்படவில்லை.

அழிவின் விளிம்பில் ஹிஸ்புல்லா

கடந்த செப்டம்பர் 27ஆம் திகதி பெய்ரூட்டில் நடந்த இஸ்ரேலின் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் நீண்டகால தலைவர் ஹசன் நஸ்ரல்லா உட்பட அதன் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டனர். ஒரு வாரத்திற்கு பின்னர் இஸ்ரேலின் மற்றொரு தாக்குதலில் நஸ்ரல்லாவின் அடுத்த வாரிசான ஹஷேம் சஃபிதீனும் கொல்லப்பட்டார்.

அந்த அமைப்பின் பெரும்பாலான உள்கட்டமைப்புகளும் சேதமடைந்து ள்ளதால், போருக்குப் பிறகு ஹிஸ்புல்லா எவ்வாறு இருக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. குழு மிகவும் பலவீனமடை ந்துள்ளது, எனினும், முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. செப்டம்பரில் மோதலை தீவிரப்படுத்தியதில் இருந்து, லெபனானில் நாளாந்தம் நூற்றுக்கணக்கான தாக்குதல்களை நடத்திய இஸ்ரேல், தெற்கிலும், கிழக்கிலும் மற்றும் தலைநகர் பெய்ரூட்டில் ஹிஸ்புல்லாவின் தளங்களை குறிவைத்து அழித்திருந்து.

காசாவில் ஏன் போர் நிறுத்தம் இல்லை?

லெபனான் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், காசாவில் ஏன் போர் நிறுத்தம் செய்யவில்லை என இஸ்ரேலின் எதிர்க்கட்சி தலைவர் **Yair Golan** கேள்வியெழுப்பியுள்ளார்.

”தெற்கில் ஜகாசாஸ போரை முடிவுக்குக் கொண்டுவருவது மிக முக்கியமான ஒன்று” என்று ஜனநாயகக் கட்சியின் எதிர்க்கட்சி கூட்டணிக்கு தலைமை தாங்கும் **Golan** சுட்டிக்காட்டியுள்ளது.

”ஹிஸ்புல்லாவுடன் ஒரு உடன்பாட்டை எட்ட முடிந்தால், ஏன் ஹமாஸுடன் உடன்பாடு செய்து பணயக்கைதிகளை விடுவிக்க முடியாது?” எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

”நெதன்யாகு போரை வெல்ல விரும்பும் வெறித்தனம் மற்றும் மெசியானிக் குழுவை அரசியல் ரீதியாக சார்ந்திருப்பதால்தான் சண்டை தொடர்கிறது,” என்று அவர் கூறினார்.

### தெற்கே செல்லும் லெபனால் இராணுவம்

போர்நிறுத்தம் நடைமுறையில் உள்ள நிலையில், லெபனானின் இராணுவம், நாட்டின் தெற்கே செல்லவும், ஐ.நா. 1701 தீர்மானத்தின் கீழ் ”அதன் பணியை நிறைவேற்றவும்” தயாராகி வருவதாகக் கூறியுள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் வெளியேறும் வரை முன் வரிசை கிராமங்களைச் சேர்ந்த மக்களை வீடு திரும்ப வேண்டாம் என்று அறிக்கை ஒன்றின் ஊடாக லெபனான் இராணுவம் அழைப்பு விடுத்துள்ளது.

நாட்டின் பிற பகுதிகளில், இஸ்ரேலியப் படைகளால் விட்டுச் செல்லப்பட்ட ”வெடிக்கப்படாத வெடிகுண்டுகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான பொருட்கள்” குறித்து அவதானமாக இருக்குமாறு குடிமக்களை இராணுவம் வலியுறுத்தியது.

வீடு திரும்பும் மக்கள்

போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் தெற்கு லெபனான் முழுவதும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்கின்றனர்.

ஆனால் அவர்களால் எல்லாப் பகுதிகளையும் சென்றடைய முடியுமா என்பது உறுதியாகத் தெரியவில்லை. தங்கள் படைகள் இன்னும் இயங்கிக்கொண்டிருக்கும் கிராமங்களுக்கு மக்கள் திரும்ப முடியாது என்று இஸ்ரேலிய இராணுவம் கூறியுள்ளது.

எனவே இவர்களால் எவ்வளவு தூரம் செல்ல முடியும் என்பது முடிவாகவில்லை.

போர்நிறுத்தத்துடன், தெற்கு லெபனான் வழியாக ஓடும் லிட்டானி ஆற்றின் தெற்கே லெபனான் இராணுவம் நிலைநிறுத்தப் போகும் 60 நாள் காலம் உள்ளது.அந்த முழுப் பகுதியும் ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் ஹிஸ்புல்லா இராணுவ உள்கட்டமைப்பில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

இதற்கிடையில், எல்லைக்கு அருகில் செயல்படும் இஸ்ரேலிய துருப்புக்கள் படிப்படியாக வெளியேறும். இது ஐநா தீர்மானம் 1701ன் அமலாக்கமாகும்.

இது ஒரு புதிய தொடக்கம் என்று எச்சரிக்கையான நம்பிக்கை இருக்கின்ற போதிலும், இஸ்ரேல் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்திற்காக நேரத்தை வாங்கிக் காத்திருக்கும் என்று பலர் அஞ்சுகிறார்கள்.





**இந்த மோதலினல் லெபனானில் 8.5 பில்லின் டொலர் பொருளாதார இழப்புகள் மற்றும் சேதங்களை உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.**



# வாகரை புளியங்கண்டலடியில் மாவீரர் நாள் அனுஷ்டிப்பு





மட்டக்களப்பு வாகரை புளியங்கண்டலடியில் நேற்று மாலைநடைபெற்ற மாவீரர் நாள் அனுஷ்டிப்பில் உறவினர்கள் அஞ்சலி செலுத்திய போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள் : பேரின்பராஜா சபேஷ்)

# முல்லைத்தீவில் 1756 பேர் பாதிப்பு

முல்லைத்த்தீவு மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக 654 குடும்பங்களைச் சேர்ந்த 1756 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் தொடர் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வான் பாயத் தொடங்கியுள்ளதுடன், இதனால் தாழ் நிலப்பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

இதன்காரணமாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 243 பேரும், கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 109 பேரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 288 குடும்பங்களைச் சேர்ந்த 858 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 93 பேரும் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 201 குடும்பங்களைச் சேர்ந்த 453 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக நேற்று காலை 8 மணியளவில் வெளியிடப்பட்ட மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மக்கள் மீட்கப்பட்டு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவை சேர்ந்தமக்கள் ஒட்டுசுட்டான் கரிவேலன் கண்டல் அ.த.க. பாடசாலையில் , ஏனையவர்கள் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் சீரற்ற வானிலை தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும், இடர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் இடர் கிராம சேவையாளர் ஊடாக முகாமைத்துவப்பிரிவு, பொலிசார், இராணுவத்தினரின் உதவியை பெறுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் 9404 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 2634 குடும்பங்களைச் சேர்ந்த 9404 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 48 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக,யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார். சங்கானை பிரதேச செயலக பிரிவில் 573 குடும்பங்களைச் சேர்ந்த 2335 பேரும், யாழ். பிரதேச செயலக பிரிவில் 470 குடும்பங்களைச் சேர்ந்த 1520 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 266 குடும்பங்களைச் சேர்ந்த 932 பேரும், ஊர்காவற்துறை பிரதேச செயலக பிரிவில் 371 குடும்பங்களைச் சேர்ந்த 1462 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 416 குடும்பங்களைச் சேர்ந்த 599 பேரும், காரைநகர் பிரதேச செயலக பிரிவில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 508 பேரும் பாதிக்கப்பட்டனர். தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 93பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 294 பேரும், நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 29 குடும்பங்களைச் சேர்ந்த 93 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 385 பேரும் உடுவில் பிரதேச செயலக பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேரும் நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 155 பேரும் வேலணை பிரதேச செயலக பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த எழு பேரும் கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேரும் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

# ரயில் சேவைகள் முற்றாக பாதிப்பு

(எஸ்.டொரின்)

மலையக ரயில் தண்டவாளங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால், நேற்று (27) இயக்கப்படவிருந்த கொழும்பு - கோட்டை - பதுளை மற்றும் பதுளை - கொழும்பு ஆகிய இரண்டு இரவு நேர அஞ்சல் ரயில்களும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு அஞ்சல் ரயில்களும் கடந்த 26ஆம் திகதியிலிருந்து இரத்து செய்யப்பட்டமையும் சுட்டிக்காட்டத்தக்கது. இதேவேளை, கொழும்பு கோட்டையிலிருந்து நானுஓயா வரை இயங்கும் புகையிரதம் இரண்டாவது நாளாக இன்றும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து, மட்டக்களப்பு ரயில் மார்க்கத்தில் இயங்கும் ரயில் சேவைகள் பொலன்னறுவை ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா ஏ-9 வீதி போக்குவரத்தும் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

வவுனியா, ஓமந்தை - நொச்சிமோட்டை மற்றும் சாந்தசோலை ஆகிய பகுதிகளில் ஏ-9 பிரதான வீதியின் ஊடாக அதிகளவான வெள்ள நீர் வழிந்தோடுவதனால் போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இதனால், அந்த வீதியைப் பயன்படுத்தும் சாரதிகள் மிகவும் அவதானமாக செயற்படுமாறும் மன்னார், செட்டிக்குளம் ஊடாக ஏ-32 பாதையூடான மாற்ற வழிகளை பயன்படுத்துமாறும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# E8 விசா மோசடி : மேலும் பல முறைப்பாடுகள் பதிவு

(கனுஷியா புஷ்பகுமார்)

E8 விசா பிரிவின் கீழ் தென்கொரியாவில் வேலை வழங்குவதாகக் கூறி பணத்தை ஏமாற்றிய பலர் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்தார். இவர்கள் தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த தலைவர், E8 விசா பிரிவின் கீழ் தென்கொரியாவில் வேலை வழங்குவதற்கு சட்டரீதியான உடன்படிக்கை இல்லாததால், அந்த வேலைகள் சட்டப்பூர்வமானது அல்ல எனவும் சுட்டிக்காட்டினார். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 'தலைவரிடம் சொல்லுங்கள்' நிகழ்ச்சித் திட்டத்திற்கு, வேலை வாங்கித் தருவதாகக் கூறி ஏமாற்றியவர்கள் குறித்து தகவல் வழங்குமாறும் கோசல விக்கிரமசிங்க தெரிவித்தார். ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களின் தரம் எதுவாக இருந்தாலும் அவர்களுக்கு நீதித்துறையின் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைவர் குறிப்பிட்டார். மேலும், தென்கொரியாவில் குறுகிய கால வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் கடந்த 26ஆம் திகதி பத்தரமுல்லை மற்றும் பொல்கஸ்ஓவிடவில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

# வளத்தாப்பிட்டி அணைக்கட்டை வெட்டுவதற்கு உத்தரவிட்டது யார்...?

(முகம்மட் முக்தார்)

சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவிற்குட்பட்ட வளத்தாப்பிட்டி நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டை புல்டோசர் கொண்டு தோண்டி நீரை வெளியேற்றியமையின் காரணமாகவே அம்பாறை மாவட்ட கரையோரப்பிரதேசம் வரலாறு காணாத வெள்ள நிலைமையை எதிர்நோக்கியதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுவதுடன் இதுபற்றி பூரண விசாரணை நடாத்தப்பட வேண்டுமெனவும் மக்கள் கோருகின்றனர்.

மழை, வெள்ளம், புயல் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் நேற்று முன்தினம்( 26) காலை வரை மிக அமைதியாக இருந்த அம்பாறை மாவட்ட கரையோரப்பிரதேசங்களான கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று பிரதேசங்களில் நண்பகலுக்குப் பின்னர் திடீரென பாரிய வெள்ள நிலைமை ஏற்பட்டது. கடந்த சில வருடங்களுக்கு முன்னரும் வளத்தாப்பிட்டி நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டினை வெட்டி நீரை வெளியேற்ற ஒரு கும்பல் திரண்டு வந்த போது அணைக்கட்டில் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர் அவர்களை விரட்டி அடித்த வரலாறும் பதிவாகியுள்ளது என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2023 ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ள நிலைமையின் போது கல்லோயா நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் பல திறக்கப்பட்ட சமயம் ஏற்படாத பாரிய வெள்ளம் தற்போது எவ்வாறு ஏற்பட்டது என கேள்வி எழுப்பும் மக்கள் தமது பிரதேசத்தில் மிக மோசமான வெள்ள நிலைமை ஏற்பட காரணமாக அமைந்தது வளத்தாப்பிட்டி நீர்த்தேக்க அணைக்கட்டுக்கள் சேதமாக்கப்பட்டமைதான் என அடித்துக்கூறுகின்றனர்.

இந்த நிலைமை பொது மக்களுக்கு ஏற்பட நீர்ப்பாசன திணைக்கள சம்மாந்துறை பிரிவு அதிகாரிகளின் கவனக்குறைவே பிரதான காரணமாகும் எனவும் குற்றம் சாட்டுகின்றனர்.

# சீரற்ற காலநிலையால் கடல் கொந்தளிப்பு



நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடல் பரப்பு என்றுமில்லாதவாறு கொந்தளிப்பு நிலைமையுடன் காணப்படுகின்றது. முல்லைத்தீவில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பொக்கணை, புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு கடல்கள் என்றுமில்லாதவாறு கடும் சீற்றத்துடன் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகின்றது. இதனையடுத்து முல்லைத்தீவு கடற்கரை பகுதிகளில் உள்ள மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாது பாதுகாப்பான இடங்களை நோக்கி சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் வெள்ளம் பாய்வதால் ஏ9 வீதி போக்குவரத்து பாதிப்பு



(கி.வசந்தன்)

வவுனியா, நொச்சிமோட்டைப் பகுதியில் வெள்ள நீர் வீதியை மேவி பாய்வதால் ஏ9 ஊடான போக்குவரத்து நேற்று (27) பாதிப்படைந்தது.

பரங்கி ஆறு ஆற்றுப்படுகை மாமடுக்குளத்தில் ஆரம்பித்து, நொச்சிமோட்டை பாலம் வழியாக பேராற்றுக்கு பாய்ந்து செல்வதால் குறித்த வீதியில் வெள்ளம் மேவி பாய்ந்து வருகின்றது. குறித்த பகுதியில் சிறிய ரக வாகனங்கள் பல பயணிக்க முடியாத நிலையில் இரவிலிருந்து நீண்ட வரிசையிலிருந்ததை நேற்று அவதானிக்க முடிந்தது.

இதன்காரணமாக கனகரக வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஏ9 வீதியூடாக யாழ்ப்பாணம் பயணிக்கும் வாகனங்கள் கெப்பத்திகொல்லாவ, வெலி ஓயா, முல்லைத்தீவு, பரந்தன் வழி அல்லது மதவாச்சி, செட்டிகுளம், மன்னார் வழி மாற்றுப் பாதைகளை பயன்படுத்துமாறு பொலிசார் அறிவுறுத்தினர்.

## அக்கரைப்பற்று - கல்முனை வீதி

# பாலம் உடைவு

## போக்குவரத்தும் பாதிப்பு



(சுலைமான் றாபி)

சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக கல்முனை–அக்கரைப்பற்று பிரதான வீதியில் நிந்தவூர் மாட்டுப்பள்ளை பிரதேசத்தில் அமைந்துள்ள 375ஃ5 பாலம் நேற்று முன்தினம் (27) அதிகாலையில் உடைந்துள்ளது.

இதனால் இந்த வீதியின் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டிருப் பதுடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேலதிக மாகாண பணிப்பாளர் காரியாலயத்தின் மாகாண பணிப்பாளர் எம்.பி அலியார், பிரதம பொறியியலாளர் ரி. சிவசுப்பிரமணியம் கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் இஷட். எம். அஸ்மிர் உள்ளிட்ட அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் இணைந்து மண்மூடையிட்டு பாலத்தின் ஊடாக தற்காலிக போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, இந்த பாலத்தினை நிரந்தரமாக செப்பனிடும் நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பட உள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேலதிக மாகாண பணிப்பாளர் காரியாலயத்தின் மாகாண பணிப்பாளர் எம்.பி அலியார் தெரிவித்தார்.

## கிழக்குப் பல்கலை:

# விடுதிகள் மூடப்பட்டுள்ளன

(பேரின்பராஜா சபேஷ்)

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விடுதிகள் புதன்கிழமை (27) முதல் அமுலுக்கு வரும் வகையில் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டு மாணவர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பட்டுள்ளதாக கிழக்குப் பல்கலைக் கழக பதிவாளர் அமரசிங்கம் பகிரதன் தெரிவித்தார்.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் நிகழ்நிலை மூலம் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் அமரசிங்கம் பகிரதன் கூறினார். கடந்த சில தினங்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகம் மற்றும் மாணவர் விடுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மாணவர்கள் வெளியேற்றப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பிரதான வீதிகளில் வெள்ள நீர் மட்டம் உயர்ந்து போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் கடமைக்கு வருவதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியதுடன் பலர் கடமைக்கு சமூகமளிக்கவில்லை.

இதனைக் கருத்திற்கொண்டு மாணவர்களை வீட்டுகளுக்கு அனுப்பியதுடன் நிகழ்நிலை மூலம் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பு,கொழும்பு வீதி மூடப்பட்டுள்ளது



சீரற்ற காலநிலை காரணமாக பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அந்தவகையில், மன்னம்பிட்டிய சந்தி (மகா ஓயா) வீதி உடைந்து காணப்படுவதால் மட்டக்களப்பு,கொழும்பு வீதி மூடப்பட்டுள்ளது. அதேபோன்று, மன்னம்பிட்டி, வெலிகந்தை, புனாணை ஆகிய பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் அவ்வீதியூடாகவும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. புனாணை பகுதியில் புகையிரதப் பாதையை குறுக்கறுத்து நீர் அதிகரித்துச் செல்வதால் மட்டக்களப்பு,கொழும்பு புகையிரத சேவையும் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

# வேத்துச்சேனை மக்களுக்கு சமைத்த உணவு வழங்கி வைப்பு



(வெல்லாவெளி நிருபர்)

தற்போது பெய்துவரும் அடைமழையால் பாதிப்புற்ற மக்களுக்கு றொட்டறிக் கழகத்தினால் கடந்த செவ்வாய்கிழமை(26) சமைத்த உணவுகள் வெல்லாவெளிப் பிரதேசத்தில் வழங்கி வைக்கப்பட்டடுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெள்ள அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்படும் வெல்லாவெளிப் பிரதேசத்தின் வேத்துச்சேனைக் கிராம மக்களுக்கே போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதனின் ஒத்துழைப்புடன் இந்த சமைத்து உணவுகள் வழங்கி வைக்கப்பட்டடுள்ளன. றொட்டரிக் கழகத்தின் ஆளுநரின் ஆலோசனையின் பெயரில் றொட்டரிக் கழகத்தின் மட்டக்களப்பு நகர் கிளையின் தலைவர் றெட்டரியன் எம்.ஜெகன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த மனிதாபிமான பணியில் றெட்டரிக் கழகத்தின் செயலாளர் றெட்டரியன் கருணாகரன், றெட்டரியன் முத்துலிங்கம், றெட்டரி திவ்யா உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர். மாவட்டத்தில் மக்களுக்கு எங்கு இடர்கள் வந்திடினும் தமது கழகம் முன்னின்று மனிதாபிமான பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், அதுபோல் தற்போது மக்கள் எதிர்கொண்டுள்ள வெள்ள அனர்த்திற்கு தம்மதால் இயன்ற பணிகளை மேற்கொண்டு வருவதோடு, மேலும் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு வேத்துச்சேனைக் கிராம மக்களுக்கு சமைத்த உணவு வழங்கவுள்ளதாக றொட்டரிக் கழகத்தின் மட்டக்களப்பு நகர் கிளையின் தலைவர் றெட்டரியன் எம்.ஜெகன் தெரிவித்துள்ளார்.

# கிண்ணியா பிரதேசத்தில் 948 பேர் வெளியேற்றம்

(கியாஸ் ஷாபி )



கனமழை காரணமாக, கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில், செவ்வாய்க்கிழமை(26) மதிப்பீட்டுக்கிணங்க, 338 குடும்பத்தைச் சேர்ந்த 948 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, சுமார் 1500 க்கும் மேற்பட்ட வேளாண்மை நிலங்களும் பாதிக்கப்பட்டிருப்பதாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம். கனி தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தம் குறித்து நேற்று(27) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், பாதிக்கப்பட்டுள்ளவர்கள் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பல வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு, மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் அறிவித்தார்.இரவு பெய்த கனமழை காரணமாக, அண்ணல் நகர், பைசல் நகர் மற்றும் மாஞ்சோலைசேனை போன்ற கிராமசேவகர் பிரிவுகளில் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டும் வெளியேறி இருப்பதாக மேலும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## கனத்த மழையினால்

# பல்நோக்கு கட்டடம் சேதம்




(கியாஸ் ஷாபி)

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, வெள்ளைமணல் கிராம சேவகர் பிரிவில், சின்னம்பிள்ளைச்சேனை கிராமத்தில் அமைந்துள்ள, பல்தேவைக் கட்டிடம் கன மழையினால், நேற்றுமுன்தினம் இரவு(26) இடிந்து, விழுந்து சேதமடைந்துள்ளது.

இந்தக் கட்டடத்தின் ஒரு பகுதி, முழுமையாக சேதமடைந்துள்ளது. ஏனைய பகுதியும் எந்த நேரமும் விடிந்து விடக்கூடிய, ஆபத்தான நிலையில் இருப்பதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கட்டடத்தின் மீதி பகுதியும் ஆபத்தான நிலையில் இருப்பதால், எவரும் இந்தக் கட்டடத்துக்குள், உட்பிரவேசிக்க வேண்டாம் என அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச சுகாதாரப் பராமரிப்பு நிலையம் அமைந்துள்ள பகுதி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.இந்த கட்டிடத்தில் கிராம சேவகர் அலுவலகம், பிரதேச மாதர் அபிவிருத்தி நிலையம், குடிசை கைத்தொழில் பயிற்சி நிலையம், பிரதேச மீனவர் சங்க அலுவலகம் ஆகியன இயங்கி வந்ததாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.



மட்டக்களப்பு– திருமலை பிரதான வீதியில் சித்தாண்டியில் உள்ள முருகன் கோவில் உட்பட பிரதேசம் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதைப் படத்தில் காணலாம்.

## கிழக்கில் 1 சி தரப்பாடசாலைகள்

# 11 ற்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாண சபையால் நிருவகிக்கப்படும் பதினொரு பாடசாலைகளில் காணப்படும் அதிபர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோரியுள்ளது. கல்முனை கல்வி வலயத்தில் பெரிய நீலாவணை விஸ்ணு ம.வி, சாய்ந்தமருது அல்– ஜலால் ம.வி, கல்முனை அல்– பஹ்ரியா ம.வி சம்மாந்துறை கல்வி வலயத்தைச் சேர்ந்த சாளம்பைக்கேணி அஸ்– ஸிறாஜ் ம.வி, மத்திய முகாம் அ.மு.க.பா, திருவானூர் விவேகானந்த ம.வி கல்குடா வலயத்தைச் சேர்ந்த பால்சேனை தமிழ் ம.வி, கட்டுமுறிவு குளம் அ.த.க.பா,கிண்ணியா வலயத்தைச் சேர்ந்த ஆலங்கேணி விநாயகர் தமிழ் ம.வி திருமலை கல்வி வலயத்தைச் சேர்ந்த விபுலானந்தர் கல்லூரி, பெருந்தெரு விக்னேஸ்வரா ம.வி ஆகிய 1சி தரத்தைச் சேர்ந்த 11 பாடசாலகளுக்கு இவ்வாறு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவையின் முதலாம் தரம் அல்லது இரண்டாம் தரத்தைச் சேர்ந்தோர் இதற்கான விண்ணப்பத்தினை டிசம்பர் 10 ம் திகதி வரை வலயக்கல்விப்பணிப்பாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஊடாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கலாம் அமைச்சின் உதவிச்செயலாளர். திருமதி.எஸ் வருணியா தெரிவித்தார்.

# காவத்தமுனை 129 குடும்பங்ளைச் சேர்ந்த 352 பேர் இடம்பெயர்வு

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை பிரதேச மக்கள் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். தொடர்மழை காரணமாக குடியிருப்பு பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாக இதுவரை 129 குடும்பங்ளைச் சேர்ந்த 352 பேர் தங்களது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து காவத்தமுனை அல் அமீன் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று, பாதிக்கப்பட்ட பலர் தங்களது உறவினர்கள் வீடுகளில் இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்து பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான அனைத்துவித தேவைகளையும் ஓட்டமாவடி பிரதேச செயலக செயலாளர் ஏ.தாஹிர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அடைமழை வெள்ளம்

# நுவரெலியா மாவட்டத்தில் 193 குடும்பங்கள் பாதிப்பு





(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்றுமுன்தினம் (26) பிற்பகல் வரை 193 குடும்பங்களைச் சேர்ந்த 691 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்துள்ளார். சீரற்ற காலநிலை காரணமாக 98 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் 50 குடும்பங்களைச் சேர்ந்த 207 பேர் 3 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். காயமடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

மேலும், நேற்று வெள்ளம் காரணமாக தடைப்பட்ட கந்தப்பளை வீதியில் பரீட்சைக்கு வந்த சிறுவர்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் உள்ளிட்ட அதிகாரிகள் செயற்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# வடிகானில் இருந்து பெண் சடலமாக மீட்பு

(ராமு தனராஜா)



பதுளை பஸ் தரிப்பிடத்துக்கு அருகாமையில் உள்ள வடிகானில் இருந்து பெண்ணொருவர் நேற்று (27) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் பதுளை நகரைச் சேர்ந்த 55 வயதுடைய யாசக பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணின் மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், குறித்த மரணம் தொடர்பில் பதுளை நீதவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பிரேத பரிசோதனை நடத்தப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்தவின் பணிப்புரையின் பேரில் பதுளை தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


# ஓடையில் தவறி விழுந்து வயோதிபப் பெண் பலி

(ராமு தனராஜா)

தனது வீட்டுக்கு முன்னால் ஓடும் ஓடையில் விழுந்து வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கந்தேகெதர பொலிஸார் தெரிவித்தனர். கஹடகஹார, இடமெகெதர, கந்தேகெதர பகுதியைச் சேர்ந்த 88 வயதுடைய வயோதிப பெண் ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த குறித்த பெண் அதிகாலை 2 மணியளவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வீட்டின் முன்னால் உள்ள ஓடையில் தவறி விழுந்து உயிர ிழந்துள்ளதாக பொலிஸ ார் தெரிவித்தனர். குறித்த வயோதிப் பெண் மனநோயால் பாதிக்கப்பட்டவர் என ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கந்தேகெதர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரிப்பு

## தாழ்வான பிரதேச மக்களுக்கு எச்சரிக்கை



(க.கிஷாந்தன்)

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வரை இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் நீர்மட்டம் அதிகரித்ததால் நேற்று அதிகாலை மேலும் ஒரு வான்கதவு திறக்கப்பட்டது.

இதனால் சென்கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்து ரம்மியமாகக் காட்சியளிக்கின்றது.அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்குக் கீழ் ஆற்றுப்பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அத்தோடு, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தில் அணைக்கட்டிற்கு மேலாக நீர் வெளியாவதைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை, காசல்ரீ நீர்த்தேக்க பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில் வாழ்கின்ற குடியிருப்பாளர்கள் அவதானத்துடன் இருக்கும்படி அதிகாரிகளினால் எச்சரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கண்டி மாவட்டத்தில் மண்சரிவு அபாயம்

கண்டி மாவட்டத்தில் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் நிலவுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ, மெததும்பர,பாத்ததும்பர,உடுதும்பர, கண்டி கங்கவட்ட கோரளை, தொலுவ, யட்டிநுவர,உடுநுவர, உடபலாத்த, பாத்த ஹேவாஹெட்ட மற்றும் தெல்தோட்டை ஆகிய இடங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இப்பிரதேச குடியிருப்பாளர்கள் விழிப்பாக இருக்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழிலுக்கு செல்ல முடியாத நிலை

(செ.திவாகரன்)



நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து கடும் மழையுடன் தாழ்நிலைப் பிரதேசங்களில் அண்டி வாழும் மக்கள் வெள்ள நீரில் மூழ்கியதால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மழையுடன் கடும் குளிரும் நிலவுகின்றதால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர். இதில் நுவரெலியா மாநகரசபை எல்லைக்குட்பட்ட பம்பரகலை தோட்டத்தில் பெருந்தோட்டங்களுக்கு வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லும் வீதிகளில் நீர் நிரம்பிச் செல்வதனால் நடந்த செல்ல முடியாமல் தாம் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கின்றனர். மேலும் நுவரெலியாவில் இடைவிடாது பெய்யும் கடும் மழை காரணமாக பம்பரகலை தோட்டத்தில் பெருமளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தில் மூழ்கிய நுவரெலியா சிறுவர் பூங்கா





(செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் அடை மழையால் பல்வேறு இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதில் நுவரெலியா மாநகர சபைக்கு சொந்தமான விக்டோரியா பூங்கா மற்றும் அதனை அண்மித்துள்ள பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால் விக்டோரியா பூங்காவில் சிறுவர் பூங்கா பகுதிக்கு உட் செல்ல சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் பெய்து வரும் தொடர் மழை காரணமாக குறித்த சிறுவர் பூங்கா குளமாக மாறியுள்ளது. அத்தோடு சிறுவர்கள் விளையாடும் பகுதி முழுவதும் மழை நீர் சூழ்ந்து காணப்படுகின்றது. விளையாட்டு உபகரணங்கள், இருக்கைகள் மற்றும் மாநகரசபையினால் பராமரிப்பு செய்து வந்த மலர்த் தோட்டங்கள் நீரில் மூழ்கிக் கிடக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பேராதனை பல்கலையில் கண்காட்சி கருத்தரங்கு

(கண்டி நிருபர்)

ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவா ஒப்பந்தத்தின் 75 வருடாந்தத்தினை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கண்காட்சி, கருத்தரங்குகளை ஒழுங்கு செய்துள்ளது.

இரண்டாம் உலகப் போருக்கு (1939-1945) பின்னர்,பேச்சுவார்த்தை மூலம் அதன் முந்தைய மூன்று ஒப்பந்தங்களையும் இணைத்தும் சில புதிய உடன்படிக்கைகளையும் சேர்த்து 1949-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12-ஆம் திகதி ஜெனீவா உடன்படிக்கையாக இறுதி வடிவம் பெற்றது. 2024 ஆம் ஆண்டானது, 1949 ஆம் ஆண்டின் ஜெனீவா உடன்படிக்கையின் 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. இதன் காரணமாக பேராதனைப் பல்கலைக்கழக பிரதான நூலக கண்காட்சி மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை (29) முதல் டிசம்பர் 9ஆம் திகதி வரை 10 நாட்களுக்கு கண்காட்சியானது பல்கலைக்கழக பிரதான நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதனை பல்கலைக்கழக கலைப்பீட சட்ட துறையும், செஞ்சிலுவை சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.



1818ஆம் ஆண்டு வெள்ளையர்களோடு போரிட்ட வீர கெப்பெட்டிபொல திசாவையின் 206ஆவது ஞாபகார்த்த தினம் கண்டி தலதா மாளிகைக்கு முன்பாக மகாமலுவை திடலில் அமைந்துள்ள அவரது அஸ்தி அடங்கிய ஞாபகார்த்த தூண்களுக்கு முன்பாக அனுஷ்டிக்கப்பட்டது. இவ்வைபவத்தில் முன்னாள் மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, முன்னாள் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, முன்னாள் மாநகர சபை மேயர் மகேந்திர ரத்வத்த, தலதா மாளிகையின் தியவதன நிலமே நிலங்க தெல பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர். (படம் : கண்டி நிருபர்)

# அதானி நிதிக்குற்றச்சாட்டு விவகாரம்: காங்கிரஸ், பாஜக இடையே மோதல்

இந்திய கோடீஸ்வரர் கௌதம் அதானி மீதான நிதிக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவரை கைது செய்யவேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தி வரும் நிலையில், இது 'சோரோஸின் திரைக்கதை' என்று பாஜக குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையில் தொழிலதிபர் அதானியின் பெயர் இடம்பெறவில்லை என்று அதானி குழுமம் தெரிவித்துள்ள நிலையில்,அதானி விவகாரம் தொடர்பாக, காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சிகள் இடையே நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நேற்றைய தினம் கருத்து மோதல்கள் ஏற்பட்டன.

நாடாளுமன்றத்தின் பிற அலுவல்களை ஒத்திவைத்து , அதானி விவகாரம் குறித்து விசாரிக்க வேண்டும் என பல எதிர்க்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியதையடுத்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற வளாகத்துக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி தெரிவித்திருப்பதாவது,

அதானி மீதான குற்றச்சாட்டுக்களை அவர் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார். அவர் கைது செய்யப்பட வேண்டும். ஆயிரம் கோடிகள் மோசடிகளுக்காக அதானி அமெரிக்காவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். அரசு



அவரைப் பாதுகாக்கிறது" என்றார்.

ராகுல் காந்தியின் கருத்துக்கு பாஜக பதிலடி கொடுத்துள்ளது

சோரோஸின் திரைக்கதை இந்தியாவில் அரங்கேறுகிறது என பாஜகவின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முதலீட்டாளர் ஜார்ஜ் சோரோஸின் திரைக்கதையை இங்கு அரங்கேற்ற காங்கிரஸ் முயல்கிறது என்று அவர் குற்றம் சுமத்தினார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "இது காங்கிரஸின் குற்றச்சாட்டு இல்லை,

இந்த வழக்கு சோரோஸின் நிதியுதவியால் அரங்கேற்றப்படுகிறது என்பதை அமெரிக்க நிர்வாகமும் அறிந்தே உள்ளது.

இந்தியாவை, நாட்டுக்கு வெளியே பொருளாதார ரீதியாக தாக்கும் ஒரு திரைக்கதையே இது. காங்கிரஸ் வேண்டுமென்றால் இதுதொடர்பாக வழக்கு தாக்கல் செய்யட்டும்.

அவர்களுக்கு சட்டப்பூர்வ வழிமுறை இருக்கிறது. அது தொடர்பாக விசாரணை நடைபெறும்" என்றார்.

பிரதமர் நரேந்திர மோடியை கடுமையாக விமர்சனம் செய்த அமெரிக்க தொழிலதிபர் சோரோஸுடன் காங்கிரஸ் கட்சியை

இணைத்து பாஜக பலமுறை குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பங்களாதேஷில் இந்து கோவில்களை இலக்கு வைத்து தாக்குதல்

பங்களாதேஷில் இந்து மத தலைவரான இஸ்கான் அமைப்பை சேர்ந்த சின்மோய் கிருஷ்ணதாசை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையடுத்து அவரை



விடுதலை செய்யக் கோரி நீதிமன்றம் முன்பாக ஏராளமான இந்துக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டங்களை தூண்டிவிட்டமை மற்றும் தேசத்துரோக வழக்குகள் அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இந்துக்கள் மீது குழுவொன்று மேற்கொண்ட தாக்குதலில் சட்டத்தரணி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த கொலைச் சம்பவத்தை கண்டித்து சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்துடன் காரணமானவர்களை கைது செய்ய 24 மணி நேர காலவகாசம் வழங்கியுள்ளனர்.

இதனிடையே சிட்டகாங்கில் போராட்டம் நடந்து வரும் நிலையில் இந்துக்களை இலக்குவைத்து தாக்குதல் சம்பவங்கள் நடந்து வருகிறது.

## மாமல்லபுரம் அருகே கார் மோதி 5 பெண்கள் பலி



சென்னை அருகே செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அருகே பண்டிதமேடு பகுதி உள்ளது. ஈ.சி.ஆர் சாலை அருகே இப்பகுதி அமைந்துள்ளது. இந்நிலையில், ஈ.சி.ஆர். சாலையில் பண்டிதமேடு பகுதியில் நேற்று மதியம் 5 பெண்கள் மாடு மேய்த்துக்கொண்டிருந்தனர். அப்போது, ஈ.சி.ஆர். சாலையில் அதிவேகமாக வந்த கார், சாலையோரம் அமர்ந்து மாடு மேய்த்துக்கொண்டிருந்த பெண்கள் மீது மோதியது. இந்த கோர விபத்தில் 5 பெண்களும் தூக்கி வீசப்பட்டனர். இச்சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே 5 பெண்களும் உயிரிழந்தனர்.

விபத்தை ஏற்படுத்திய காரை சுற்றி வளைத்த அப்பகுதியை சேர்ந்தவர்கள் காரில் இருந்த நபர்களை பிடித்து சரமாரியாக தாக்கினர்.

# உதகையில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஆளுநர், அமைச்சர்கள் வரவேற்பு

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 4 நாள் பயணமாக புதன்கிழமை உதகை வந்தடைந்தார். தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி பூங்கொத்து கொடுத்து குடியரசுத் தலைவரை வரவேற்றார்.

நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க நான்கு நாள் பயணமாக விமான மூலம் கோவை வந்தார். நீலகிரி மாவட்டத்தில் காலநிலை மாற்றம் ஏற்பட்டு உதகையில் கடும் பனிமூட்டம் நிலவியதால் அவரது ஹெலிகாப்டர் பயணம் ரத்து செய்யப்பட்டது. கோவையில் இருந்து வீதி மார்க்கமாக காரில் உதகை வந்தடைந்தார். ராஜ் பவன் வந்த குடியரசுத் தலைவருக்கு

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா, காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

குடியரசுத் தலைவரை வரவேற்க தமிழக ஆளுநர் ரவி நேற்றுமுன்தினம் இரவு உதகை வந்தார்.

உதகை ராஜ்பவனில் குடியரசுத் தலைவரே வரவேற்ற பின்னர் உடனடியாக சென்னை திரும்பினார். குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கார் மூலமாக குன்னூர் வெலிங்டனில் உள்ள ராணுவ பயிற்சி கல்லூரிக்கு வியாழக்கிழமை செல்கிறார்.

அங்கு போரில் உயிரிழந்த ராணுவ



வீரர்களுக்கு வைக்கப்பட்டுள்ள நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல், லெபனானின் போர் நிறுத்த ஒப்பந்தம்: இந்தியா வரவேற்பு

பாலஸ்தீனத்தில் செயல்பட்டு வரும் ஹமாஸ் அமைப்பிற்கு ஆதரவாக ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பும் இஸ்ரேலுடன் போரில் ஈடுபட்டு வருகிறது. லெபனான் நாட்டில் இருந்தபடி, இஸ்ரேலை தாக்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டது. இதில், அடுத்தடுத்து பலர் கொலை செய்யப்பட்டனர். ஹமாஸ் அமைப்பின் தலைவரான இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார். அடுத்து, ஹிஸ்புல்லா






அமைப்பின் தளபதி புவாத் ஷுகர் என்பவரை இஸ்ரேல் தாக்கி படுகொலை செய்தது. இந்த சூழலில், ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹசன் நஸ்ரல்லாவை பெய்ரூட் நகரில் வைத்து இஸ்ரேல் ராணுவம் கடந்த செப்டம்பர் 27-ந்தேதி தாக்குதல் நடத்தி கொன்றது. இதன்பின்பு, ஹிஸ்புல்லா அமைப்பின் தடுப்பு காவல் பிரிவின் தளபதி மற்றும் அவர்களுடைய செயற்குழுவின் உறுப்பினரான நபில் குவாவக் என்பவரை இஸ்ரேல் ராணுவம் தாக்கி அழித்தது. தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியது.

கடந்த அக்டோபரில் இருந்து இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே நடந்து வரும் மோதலில் பலர் உயிரிழந்து உள்ளனர். இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் லெபனானில் 3,800க்கு மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். 16 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர். இதனை லெபனானின் சுகாதார அமைச்சகம் உறுதிப்படுத்தி உள்ளது. இந்த நிலையில், இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ தகவலை அமெரிக்க ஜனாதிபதி பைடன் வெளியிட்டு உள்ளார். லெபனானில் நடந்து வரும், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்புடனான மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவையும் ஒப்பு கொண்டுள்ளது. மேலும்"இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையே அறிவிக்கப்பட்டுள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தை இந்தியா வரவேற்கிறது. விரிவாக்கம், கட்டுப்பாடு மற்றும் உரையாடல் மற்றும் ராஜதந்திர பாதைக்கு திரும்புவதற்கு நாங்கள் எப்போதும் அழைப்பு விடுத்துள்ளோம். இந்த முன்னேற்றங்கள் பரந்த பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெங்கால் புயல் எதிரொலி: தமிழகத்தில் கடல் சீற்றம்

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தமிழக கடற்கரையை நோக்கி நகர்வதால் கடலோர பகுதிகளில் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகிறது. 10 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் நகர்வு வேகம் 13 கி.மீ ஆக அதிகரித்துள்ளது. நாகைக்கு 400 கி.மீ. தென் கிழக்கிலும், சென்னைக்கு 590 கிமீ தெற்கு - தென்கிழக்கில் மையம் கொண்டுள்ளது.

வங்க கடலில் பெங்கல் புயல் உருவாகும் நிலையில் கடலூர் மாவட்டத்தில் உள்ள கடற்கரைகளில் பல அடி உயரத்திற்கு அலைகள் எழுந்து அடங்குகிறது .கடலூர் மாவட்டம் முழுவதும் ஐந்தாவது நாளாக மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை. மழை பாதிப்புகளை எதிர்கொள்ள கடலூர் மாவட்டத்தில் 42 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் கடும் மழை : நான்கு மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் பெங்கல் புயலாக மாறும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. தற்போது தென் கிழக்கு வங்கக்கடலில் உள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மணிக்கு 13 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வருகிறது. பெங்கல் புயலாக மாறியபின் இன்று தமிழக கடலோர பகுதிகளை நெருங்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனிடையே வங்கக்கடலில் உருவாக உள்ள"பெங்கல் புயல்" சென்னையை நெருங்க அதிக வாய்ப்புள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தின் 4 மாவட்டங்களுக்கு இன்று ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, கட



லூர், மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் அதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், அரியலூர், தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய 6 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, திருச்சி, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## திருச்செந்தூரில் கடல் அரிப்பு: பக்தர்கள் பீதி

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கடல் அரிப்பு ஏற்பட்டதால் பக்தர்கள் பாதுகாப்பாக நீராடும்படி போலீசார் அறிவுறுத்தினர். அறுபடை வீடுகளில் 2ம் படைவீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மட்டுமே கடற்கரையில் அமைந்துள்ளது. இதனால் கோயிலுக்கு வரும் பக்தர்கள் கடலில் புனித நீராடிய பிறகே சுவாமி தரிசனம் செய்கின்றனர்.



இந்நிலையில் கடந்த சில தினங்களாக வங்கக்கடலோரம் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி ஏற்பட்டுள்ளதால் தென் தமிழக கடற்கரையோர பகுதியில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது.இதையடுத்து திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் பகுதியில் நேற்று திடீரென கடல் அரிப்பு ஏற்பட்டது. சுமார் 25 அடி நீளத்திற்கும், 10 அடி ஆழத்திற்கும் கடலில் அரிப்பு ஏற்பட்டுள்ளதால் பக்தர்கள் பீதியடைந்தனர்.

# அவுஸ்திரேலியாவில் சிறுவர்களுக்கு சமூக ஊடகங்கள் தடை

## நாடாளுமன்றில் சட்டம் நிறைவேற்றம்

உலக வலம் WORLD NEWS

அவுஸ்திரேலியாவில் சிறுவர்களுக்கான சமூக ஊடகத் தடைக்கான மசோதா நிறைவேற்றப்பட்டது.

16 வயதுக்குள்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கும் அவுஸ்திரேலிய அரசின் திட்டத்துக்கு அந்த நாட்டின் அனைத்து மாகாணங்களும் ஆதரவு தெரிவித்திருந்தன.

இது குறித்து பிரதமர் என்டனி ஆல்பானீஸ் எட்டு மாகாணங்களின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார். இதன்போது குறித்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்கள் முழு ஆதரவு தெரிவித்தனர்.

இதனையடுத்து அதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. சிறுவர்களின் அறிவை வளர்க்கும் சமூக ஊடகப் பயன்பாட்டுக்கு ஒரேயடியாகத் தடை விதிப்பதைவிட, அவற்றைப் பாதுகாப்பாகப் பயன்படுத்த அவர்களுக்கு சொல்லித் தருவதுதான் சரியான தீர்வாக இருக்கும் என்று இத்தகைய சட்டத்துக்கு சிறுவர்கள் நல ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், சர்ச்சையான சூழலில் இந்தச் சட்டம், நாடாளுமன்றத்திலும் நீதிமன்றத்திலும் கடும் சவால்களைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதன்படி, அவுஸ்திரேலியாவின் நாடாளுமன்றத்தில் நேற்று காலை (நவ.27) 16 வயதுக்குள்பட்ட குழந்தைகளை சமூக ஊடகங்களில் இருந்து தடை செய்யும் மசோதாவை நிறைவேற்றியது.



அந்த வகையில், சிறுவர்கள் டிக்டாக், ஃபேஸ்புக், ஸ்னாப்சாட், ரெடிட், எக்ஸ், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட தளங்கள் வைத்திருப்பதைத் தடுக்கும் வகையில் 50 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் வரை அபராதம் விதிக்கும் மசோதாவை முக்கியக் கட்சிகளும் ஆதரித்தன. இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் 102 வாக்குகளும், இதற்கு எதிராக 13 வாக்குகளும் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் - ஹிஸ்புல்லா போர் நிறுத்தம் பிரித்தானியா வரவேற்பு



இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமைக்கு பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினருக்கும் இடையே நீண்ட காலமாக போர் நீடித்து வருகின்றது. இந்நிலையில், நேற்று உறுதி செய்யப்பட்டுள்ள போர்நிறுத்தம் ஒப்பந்தம், லெபனான் மற்றும் வடக்கு இஸ்ரேலின் குடிமக்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கும்.

அவர்கள் கடந்த சில மாதங்களாக அழிவுகரமான மோதல்களின் போது நினைத்துப் பார்க்க முடியாத விளைவுகளை சந்தித்துள்ளனர்.

இந்நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தம் லெபனானில் ஒரு நீடித்த அரசியல் தீர்வாக மாற்றப்பட வேண்டும்.

இது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் தீர்மானம் 1701 இன் அடிப்படையில், குடிமக்கள் தங்கள் வீடுகளுக்கு நிரந்தரமாக திரும்பவும், எல்லையின் இருபுறமும் உள்ள சமூகங்கள் மீண்டும் கட்டமைக்கவும் அனுமதிக்கும்.

மத்திய கிழக்கில் நீண்ட கால, நிலையான அமைதியைப் பின்தொடர்வதற்காக நடந்து வரும் வன்முறைச் சுழற்சியை உடைப்பதற்கான முயற்சிகளில் பிரித்தானியாவும் அதன் நட்பு நாடுகளும் தொடர்ந்து முன்னணியில் இருக்கும்.

மேலும், காசாவில் போர்நிறுத்த ஒப்பந்தம், பணயக்கைதிகள் அனைவரையும் விடுவித்தல் மற்றும் மிகவும் அவசியமான மனிதாபிமான உதவிகளுக்கான கட்டுப்பாடுகளை நீக்குதல் ஆகியவற்றை நோக்கி உடனடி முன்னேற்றத்தைக் காண வேண்டும்.

முன்னதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஆகியோர் தங்களது தனித்தனி உரைகளில், போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அறிவித்திருந்திருந்தனர்.

# கராச்சியில் 'இணைய சேவை' முடக்கம்

## விரக்தியில் பொது மக்கள்

பாகிஸ்தானின் கராச்சியில் கடந்த மூன்று நாட்களாக இணையம் செயலிழந்து, அன்றாட நடவடிக்கைகளில் இடையூறு ஏற்பட்டுள்ளதுடன் ஒன்லைன் சேவைகளை நம்பி இருப்பவர்களுக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

வைஃபை மற்றும் மொபைல் டேட்டா சேவைகள் இரண்டிலும் சிக்கல்கள் இருப்பதாகவும், பேஸ்புக், வாட்ஸ்அப் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடக தளங்களை அணுகுவதில் சிரமங்கள் இருப்பதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, படங்கள், குரல் பதிவுகள், பெரிய கோப்புகளை அனுப்பவோ அல்லது காணொளிகளை பதிவேற்றவோ சிரமப்படுவதாக பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் விடுதலையை வலியுறுத்தி பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் (PTI) கட்சியின் ஆதரவாளர்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்தை தொடர்ந்து இந்த இணையச் சேவை முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

போராட்டகாரர்களினால், சாலைத் தடைகள் உள்ளிட்ட நிலைமையை மோசமாக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

கராச்சி ஒரு பெரிய பெருநகர நகரமாக இருந்தாலும், இன்னும் திறமையான பொது போக்குவரத்து அமைப்பு இல்லை, இதனால் கணிசமான எண்ணிக்கையிலான குடிமக்கள் ஒன்லைன் வண்டி சேவைகளை நம்பியிருக்கிறார்கள்.

இந்நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள இடையூறு பொது மக்களை விரக்திக்கு நிலைக்கு தள்ளியுள்ளது. குறிப்பாக மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் மத்தியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.



# பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா விடுதலை

ஊழல் குற்றச்சாட்டு வழக்கில் இருந்து பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது பதவி காலத்தில் "ஜியா அறக்கட்டளை" என்ற தொண்டு நிறுவனத்தினூடாக அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி பணம் சேர்த்த குற்றச்சாட்டில் அவருக்கு 07 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர் அந்த தண்டனை 10 வருடங்களாக உயர்த்தப்பட்டது. இதற்கிடையில், "ஜியா ஆதரவற்றோர் இல்ல அறக்கட்டளை" என்ற தொண்டு நிறுவனம் மூலம் மோசடி செய்ததாக கூறி, மற்றொரு வழக்கில் கலிதா ஜியாவுக்கு 5 வருடங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதன்பின்னர் சுமார் 776 நாட்கள் சிறையில் இருந்த கலிதா ஜியா, கொரோனா ஊரடங்கு உள்ளிட்ட காரணங்களால் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி வீட்டு சிறைக்கு மாற்றப்பட்டார். இதனை தொடர்ந்து, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினா பதவி விலகி ஆட்சி மாற்றம் நடந்த நிலையில், கடந்த ஒகஸ்ட் மாதம் ஆறாம் திகதி முகமது யூனிஸ் தலைமையிலான இடைக்கால அரசு கலிதா ஜியாவை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்தது. இதனிடையே டாக்கா நீதிமன்றம் பிறப்பித்த 7 வருட சிறை உத்தரவு தொடர்பாக கலிதா ஜியா தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நீதிமன்றில் நடைபெற்று வந்தது. அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், ஊழல் வழக்கில் இருந்து கலிதா ஜியாவை விடுவிக்குமாறு உத்தரவிட்டனர்.

# பூமி அச்சு 31.5 அங்குலம் சாய்ந்தது

## ஆய்வில் தகவல்

நிலத்தடி நீர் குறைவு காரணமாக, பூமியின் துருவம் சுமார் 80 சென்டி மீட்டர் கிழக்கு நோக்கி நகர்ந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சியோல் தேசிய பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் கி-வியா சியோ தலைமை யிலான ஆராய்ச்சியாளர்கள் கடந்த 1993ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை புவி இயற்பியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

இதன் ஆய்வுக் கட்டுரை 'ஜியோ பிசிக்கல் ரிசர்ச் லெட்டர்ஸ்' என்ற இதழில் வெளியாகியுள்ளது. இதன்படி, ஆராய்ச்சி மேற்கொண் காலப்பகுதியில் பூமியிலிருந்து 2,150 ஜிகா தொன்கள் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், கடல் மட்டமும் 0.24 அங்குலம் உயர்ந்து, பூமியின் நிறை விநியோகத்தில் மாற்றம் ஏற்பட்டு அதன் சுழற்சி அச்சு ஆண்டுக்கு 4.36 சென்டி மீட்டர் சாய்வதற்கு வழிவகுக்கிறது.

தற்போது அது 31.5 அங்குலம் சாய்ந்துள்ளதாகவும், நிலத்தடி நீர், கடலுக்கு மீண்டும் செல்வது, துருவ இயக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பூமியின் அச்சில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம், வானிலையில் உடனடி பாதிப்பு ஏற்படப் போவதில்லை. ஆனால் தொடர்ச்சியாக நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டால், நீண்டகால பாதிப்பு ஏற்படலாம் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பூமியின் துருவ இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், பருவநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். அதனால், நீடித்த நீர் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம்." அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



# உலகின் மிக வயதான ஜோன் டின்னிஸ்வுட் காலமானார்

உலகின் மிக வயதானவரன் என கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த ஜோன் டின்னிஸ்வுட் தனது 112வது வயதில் இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டனில் உள்ள ஒரு பராமரிப்பு இல்லத்தில் வைத்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டின்னிஸ்வுட் இசையினாலும் அன்பினாலும் சூழப்பட்ட தனது இறுதி ஆண்டுகளைக் கழித்ததாக குடும்பத்தினர் பகிர்ந்து கொண்டனர். பல ஆண்டுகளாக அவரை கவனித்து வந்தவர்களுக்கும் அவர்கள் நன்றி தெரிவித்தனர்.

114 வயதான வெனிசுலாவைச் சேர்ந்த ஜுவான் விசென்டே பெரெஸ், 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உயிரிழந்த பின்னர் உலகின் மிக வயதான நபராக டின்னிஸ்வுட் மாறினார்.



டைட்டானிக் கப்பல் மூழ்கிய அதே ஆண்டில், 1912இல் லிவர்பூலில் பிறந்த டின்னிஸ்வுட், இரண்டு உலகப் போர்களிலும், இரண்டு உலகளாவிய தொற்றுநோய்களிலும் தப்பினார்.

இரண்டாம் உலகப் போரின் போது ரோயல் ஆர்மி பே கார்ப்ஸில் பணியா ற்றினார். அவர் 1942இல் பிளட்வெனை மணந்தார். ஒரு மகள், நான்கு பேரக்குழந்தைகள் மற்றும் மூன்று கொள்ளுப் பேரக் குழந்தைகளைக் கொண்ட டின்னிஸ்வுட், பின்னர் எண்ணெய் துறையில் கணக்கா ளராக பணியாற்றினார்.

இவரது மனைவி 1986இல் உயிரிழந்திருந்தார். டின்னிஸ்வுட் எந்த ஒரு சிறப்பு உணவுமுறையையும் பின்பற்றவில்லை, ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அவருக்கு பிடித்தமான வறுக்கப்பட்ட மீன் சாப்பிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.




# இலங்கை அணி அபார பந்து வீச்சு



## தடுமாறும் தென்னாப்பிரிக்கா

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் தென்னாப்பிரிக்கா அணி தடுமாற்றத்தை எதிர்கொண்டுள்ளது.

தென்னாப்பிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இரண்டுப் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதன் முதல் போட்டி டர்பனில் ஆரம்பமாகியிருந்தது. இலங்கை நேரப்படி மதியம் ஒரு மணிக்கு இந்தப் போட்டி ஆரம்பமாகியிருந்தது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் பந்து வீச முடிவெடுத்திருந்தது. இதன்படி, தென்னாப்பிரிக்கா சார்பில் எய்டன் மார்க்ரம் மற்றும் டோனி டி ஜோர்ஜி ஆகியோர் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர்.

எனினும், அவர்கள் இலங்கை அணியின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அவர்கள் முறையே ஒன்பது மற்றும் நான்கு ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

இந்தச் செய்தி எழுதும் வரையில் 17.3 ஓவர்கள் எதிர்கொண்டிருந்த தென்னாப்பிரிக்கா, 54 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுகளை பறிகொடுத்திருந்தது.

அந்த அணி சார்பில் தெம்பா பவுமா ஓரளவு நிதானமாக துடுப்பெடுத்தாடியிருந்தார். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் லஹிரு குமார இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

# வாழைச்சேனை பிரீமியர் லீக் போட்டிகள் வெற்றிகரமாக நிறைவு







வாழைச்சேனை பிரீமியர் லீக் கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்ட தொடரில் வெற்றி பெற்ற கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணம் வழங்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வு வாழைச்சேனை வீ.சீ. மைதானத்தில் இடப்பெற்றிருந்தது.

20 வயதிற்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் தொடரில் 10 அணிகள் பங்குபற்றியதுடன் போட்டித்தொடரின் சம்பியனாக ஏறாவூர் பிளாக் லயன்ஸ் அணியினர் வெற்றிபெற்றிருந்தனர். இரண்டாமிடத்தை ஓட்டமாவடி ஸ்டார் ஸ்ட்ரைக்கர் அணியினர் பெற்றுக்கொண்டனர்.

மேலும் 26 வயதிற்குட்பட்டவர்களுக்கான 10 அணிகள் பங்கு பற்றிய கிரிக்கெட் சுற்றுத்தொடரில் கொண்டயன்கேணி கே.எம்.எஸ். அணியினர் வெற்றிபெற்றதுடன், இரண்டாமிடத்தை ஓட்டமாவடி வளர்பிறை அணியினர் பெற்றுக்கொண்டனர்.

19 வயதிற்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட தொடரில் வாழைச்சேனை அல்-அக்ஸா விளையாட்டுக்கழகம் சாம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டதுடன் இரண்டாமிடத்தை ஓட்டமாவடி யங் லயன்ஸ் அணியினர் பெற்றுக் கொண்டனர்.

வெற்றிக்கேடயம் வழங்கும் வைபவத்தில் அதிதிகளாக வாழைச்சேனை மஸ்ஜிதுல் ஹிலுரிய பள்ளிவாயல் சம்மேளன தலைவரும் பிரபல வர்த்தகருமான கலீல் மற்றும் சிராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் இந்த நிகழ்வில் வாழைச்சேனை அல் - காசா விளையாட்டு கழக தலைவர் ரபீக், இஸ்ஸத், சமஹான் மற்றும் அக்கீல் மற்றும் உறுப்பினர்கள் ஊர்பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# சம்பியன்ஸ் லீக் பார்சிலோனா மற்றும் ஆர்சனல் அணிகள் வெற்றி

சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில், மான்செஸ்டர் சிட்டி அணி தொடர்ந்தும் பின்னடைவை சந்தித்து வரும் நிலையில், பார்சிலோனா, ஆர்சனல் மற்றும் பேயர்ன் முனிச் ஆகியவை அணிகள் வெற்றியை பதிவு செய்துள்ளன.

ஆர்சனல் அணி ஸ்போர்ட்டிங் அணியை தோற்கடித்த அதே வேளையில், ஸ்டேட் ப்ரெஸ்டோயிஸ் அணியை தோற்கடித்ததன் மூலம் பார்சிலோனா தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்தது.

பேயர்ன் முனிச் பிஎஸ்ஜியை தோற்கடித்திருந்தது.

லிஸ்பனில் நடைபெற்ற ஆட்டத்தில் அர்செனல் அணி போர்ச்சுகல் கிளப் ஸ்போர்டிங்கை 5-1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

ஆர்சனல் அணிக்காக கேப்ரியல் மார்டினெல்லி (7'), கெய் ஹவர்ட்ஸ் (22'), கேப்ரியல் மாகல்ஹாஸ் (45 10), புகாயோ சகா (65'), லியான்ட்ரோ ட்ராசார்ட் (82') ஆகியோர் கோல் அடித்தனர்.

ஸ்போர்ட்டிங் அணி சார்பில் 47வது நிமிடத்தில் கோன்சாலோ இனாசியோ கோல் அடித்திருந்தார். இதன் மூலம் ஐந்து போட்டிகளில் மூன்று வெற்றியுடன் ஆர்சனல் தற்போது புள்ளிப்பட்டியலில் ஏழாவது இடத்தில் உள்ளது.



இதற்கிடையில், ஸ்டேட் ப்ரெஸ்டோயிஸ் அணிக்கு எதிரான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றிருந்தது. அந்த அணியின் நட்சத்திர வீரர் றொபர்ட் லெவன்டோவ்ஸ்கி இரண்டு கோல்கள் அடித்திருந்தார்.

சாம்பியன்ஸ் லீக்கில் பார்சிலோனாவின் தொடர்ச்சியாக நான்காவது வெற்றி இதுவாகும். இதன்மூலம் ஐந்து போட்டிகளில் நான்கு வெற்றிகளுடன் 12 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை பார்சிலோனா தக்கவைத்துள்ளது.

இதேவேளை, பிஎஸ்ஜி அணியை 1-0 என்ற கோல் கணக்கில் பேயர்ன் முனிச் வீழ்த்தியது. பேயர்னின் வெற்றி கோலை டிஃபெண்டர் கிம் மின்-ஜே அடித்தார்.

மற்றொரு ஆட்டத்தில், பேயர் லெவர்குசென் அணி 5-0 என்ற கோல் கணக்கில் சால்ஸ்பர்க் அணியை வீழ்த்தியது. இந்த வெற்றியின் மூலம் லெவர்குசென் பத்து புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன்ஷிப் கிண்ண சர்ச்சை இம்மாத இறுதிக்குள் தீர்வு




சம்பியன்ஷிப் கிரிக்கெட் தொடர் குறித்து இம்மாதம் இறுதிக்குள் முடிவெடுக்க சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐசிசி) தயாராகியுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 29ஆம் திகதி நிகழ்கலை ஊடாக கூட்டம் நடத்தப்பட்டு, போட்டி மற்றும் போட்டி அட்டவணை குறித்து இறுதிமுடிவெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐசிசி சார்பில் கடந்த 1996ஆம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான், இலங்கையில் ஒருநாள் உலகக் கிண்ண தொடர் நடந்தது. இதன் பின்னர் பாகிஸ்தானில் எவ்வித ஐ.சி. சி தொடரும் இடம்பெறவில்லை.

2008ஆம் ஆண்டு மும்பையில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலை அடுத்து இந்திய அணி, பாதுகாப்பு காரணங்களுக்காக பாகிஸ்தான் சென்று விளையாடவில்ல.

மேலும், 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணியினர் மீது லாகூரில் பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் எந்த அணியும் பாகிஸ்தான் செல்ல மறுத்தன. எவ்வாறாயினும், 2021ஆம் ஆண்டு ஆசியக் கிண்ண தொடர் அங்கு நடந்தது. ஆனால், இந்திய அணி பங்கேற்ற போட்டிகள் இலங்கையில் நடந்தன.

இவ்வாறான பின்னணியிலேயே, 2025ஆம் பெப்ரவரி மாதம் சம்பியன் ஷிப் கிண்ண கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. எனினும், பாகிஸ்தான் செல்ல இந்தியா மறுத்துள்ளது.

மேலும், இந்திய அணி விளையாடும் போட்டிகளை துபாயில் நடத்த வேண்டும் என அந்நாட்டு கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், இந்த கோரிக்கையை ஏற்க, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மறுத்தது.

இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவராக இந்தியாவின் ஜெய் ஷா டிசம்பர் முதலாம் திகதி பொறுப்பேற்க உள்ளார்.

அதற்கு முன்னதாக, தற்போதைய நிர்வாகம், சம்பியன்ஷிப் கிண்ண சர்ச்சைக்கு தீர்வு காண வேண்டும் என ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.

இதனால் எதிர்வரும் 29ஆம் திகதி நிகழ்நிலை ஊடாக கூட்டம் நடத்தப்பட்டு, போட்டி மற்றும் போட்டி அட்டவணை குறித்து இறுதிமுடிவெடுக்கப்படவுள்ளது.

# சைம் ஐயூப்பின் அதிரடி கன்னி சதத்தால் சிம்பாப்வேயை பழி தீர்த்தது பாகிஸ்தான்

புலுவாயோவில் இடம்பெற்ற சிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இளம் வீரரான சைம் ஐயூப்பின் அதிரடிக் கன்னிச் சதத்தின் உதவியுடன் 10 விக்கெட்டுக்களால் மிக இலகு வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 1-1 என சவாலாக்கியுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் சிம்பாப்வே அணி டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 80 ஓட்டங்களால் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணிக்கு அதிர்ச்சி கொடுத்து தொடரில் 1-0 என முன்னிலை பெற்றிருந்தது.

இந்நிலையில் இரண்டாவது போட்டியின் நாணயச்சுழற்றிசியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் முஹம்மது ரிஸ்வான் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்திருந்தார்.

மேலும் பாகிஸ்தான் அணி சுழற்பந்து வீச்சாளரான அப்ரார் அஹமட்டிற்கு சர்வதேச ஒருநாள் அறிமுகத்தினை இப்போட்டியில் வழங்கியிருந்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி அறிமுக வீரரான அப்ரார் அஹமட்டின் சுழலில் சிக்கி 32.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 145 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் டியோன் மெயர்ஸ் 33 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் அப்ரார் அஹமட் நான்கு விக்கெட்டுக்களையும், சல்மான் அஹா மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

பின்னர் 146 என்றவெற்றி இலக்கு நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த பாகிஸ்தான் அணியின் ஆரம்ப வீரர்களில் இளம் இடதுகைத் துடுப்பாட்ட வீரரான சைம் ஐயூப் ஆரம்பம் முதல் அதிரடி காட்ட மற்றைய ஆரம்ப வீரரான அப்துல்லாஹ் ஷபீக் நிதானம் காட்டினார்.

ஒருபுரத்தில் நான்கு மற்றும் ஆறு ஓட்டங்களை விளாசித் தள்ளிய சைம் ஐயூப் 53 பந்துகளில் தனது கன்னி ஒருநாள் சதத்தினை விளாசி 113 ஓட்டங்களுடன் நிலைத் திருந்தார்.

மறுபுரம் நிதானம் காட்டிய ஷபீக் 32 ஓட்டங்களுடன் நிலைத்திருக்க முதல் விக்கெட் இணைப் பாட்டத்தில் இருவரும் 18.2 ஓவர்களில் 148 ஓட்டங்களைப் பகிர பாகிஸ்தான் அணி 10 விக்கெட்டுக்களால் மிக இலகு வெற்றியைப் பதிவு செய்தது.




# மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியாவுக்கு நான்கு ஆண்டுகள் தடை




இந்தியாவின் முன்னணி மல்யுத்த வீரரான பஜ்ரங் புனியாவுக்கு நான்கு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேசிய அணி தேர்வு சோதனையில் ஊக்கமருந்து சோதனை மாதிரியை சமர்ப்பிக்க மறுத்ததற்காக பஜ்ரங் புனியாவுக்கு தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை நான்கு ஆண்டுகள் தடைவிதித்துள்ளது.

இதே குற்றத்திற்காக தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை முன்னதாக அவரை ஏப்ரல் 23ஆம் திகதி இடை நீக்கம் செய்து இருந்தது.

இந்த தடை காரணமாக மல்யுத்தப் போட்டிகளில் பங்கேற்கவோ அல்லது வெளிநாட்டு பயிற்சிகளைப் பெறவோ பஜ்ரங் அனுமதிக்கப்படமாட்டார்.

30 வயதான அவர் 2020ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்று சாதித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 28ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.